Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 17 03 - 12 - 94 சனிக்கிழமை ஓசை 288

## க. பொ. த. சா/த பரீட்சை; நிலையம் மாற்றம் குறித்து அறிவிப்பு

யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களம், வலயம் 02க்கு உட்பட்ட பின்வரும் க. பொ. த. (சா / த) பரீட்சை நிலையங்கள் மாணவர்களின் வசதி கருதி பின்வரும் ஒழுங்கில் மாற்றப்பட்டுள்ளன. பரீட்சை மண்டபத்தின் பெயர்: யா / வட்டு திருஞான சம்பந்த வித்தி. மண்டபம் - 2. யா / யாழ்ப்பாணக் கல்லூரிக்கும், யா / வட்டு இந்துக் கல்லூரி மண்டபம் - 3 - யா / சித்தன்கேணி ஸ்ரீகணேச விக்கும்: யா / குளமங் ஆல்றோ. க. த. க. பா. -யா / மல்லாகம் ம. விக்கும், யா / மானிப்பாய் இந்துக்கல்லூரி. மண்டபம் 04 - யா / மகாஜனா கல்லூரிக்கும், யா / மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபம்-05 - யா / மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ. க. த, க, பாடசாலைக்கும். யா / சுதுமலை சிம்யபாரதி வித்தி மண்டபம்-02 - யா / இளவாலை மெய்கண்டான் வித்தி மானிப்பாய்க்கும் மாற்றப்பட்டுள்ளன.

# புலிகளின் மேலாதிக்கம் வலுக்கின்றது

# ராணுவத்தின் ஆற்றல் வீழ்ச்சியுறுகிறது

## தனிச் சிங்களத்தில் நேர அட்டவணை

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் பயிற்சிக்கல்லூரிக்கான இறுதிப்பரீட்சைக்கு அனுப்பப்பட்டுள்ள பரீட்சை நேர அட்டவணை முழுமையாக சிங்களத்திலேயே அனுப்பப்பட்டுள்ளது.

இதனால் மாணவர்கள் நேர அட்டவணையை புரிந்து கொள்ள முடியாது சிங்கள மொழி தெரிந்தவர்களை நாடி செல்கின்றனர்.

## சிரேஷ்ட இராணுவ அதிகாரி எச்சரிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் இராணுவ ரீதியான பலமும், மேலாதிக்கமும் அதிகரித்துவரும் வேளையில் இராணுவப் படையணிகளின் ஆற்றல் வெகுவேகமாக வீழ்ச்சி அடைந்துவருவதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் எச்சரித்துள்ளதாக ஐலண்ட் பத்திரிகை தெரிவிக்கின்றது.

இதுகுறித்து அவ் அதிகாரி மேலும் குறிப்பிடுகையில்

நிரந்தர இராணுவத்தினதும் தொண்டர் இராணுவ அணியினதும் படையணிகளின் ஆற்றல் வெகு வேகமாக வீழ்ச்சியடைந்து வருகிறது.

50 அதிகாரிகள் உட்பட 850 சிப்பாய்களை கொண்டது ஒரு படையணியாகும். பல்வேறு காரணங்களால் பலர் இராணுவத்தை விட்டு வெளியேறியதைத் தொடர்ந்து தற்போது படையணிகளின் வலு650 ஆக குறைந்துள்ளது.

சில படையணிகளில் 24 அதிகாரிகளும் 600 சிப்பாய்களும் மட்டுமேயுள்ளனர்.

சடந்த அரசாங்க காலத்தில் குறிப்பிட்ட வயதெல்லைக்கு முன்பாக ஓய்வு பெறுவது தடை இருந்தும் ஏற்கனவே, இவ்வாறு 17 லெப்ரினன்ட் கேணல்கள் தமது பதவியிலிருந்து ஓய்வு பெற்றிருந்தனர்.

படையணிகளில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்ப உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென சிரேஷ்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(6-ம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்திற்கு முறையான பிரதேச செயலாளர்கள் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு முறையான பிரதேச செயலாளர்கள் புதிதாக நியமனம் செய்யப்பட்டு நியமனக்கடிதங்கள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

புதிய திட்டப்படி இலங்கை நிர்வாக சேவையில் வகுப்பு ஒன்றில் உள்ளவர்களே பிரதேச செயலாளர்களாக உள்நாட்டு அமைச்சினால் நியமிக்கப்பட வேண்டும்.

சமீபத்தில் அலரி மாளிகையில் பிரதி பாதுகாப்பு அமைச்சர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டவாறு, ஒக்டோபர் மாதம் தொடக்கம் யாழ். மாவட்டத்தில் முறையான பிரதேச செயலாளர்கள் அமைதல் அங்கீகரிக்கப்பட்டிருப்பதாகவும் அதன்படி யாழ். மாவட்டத்தில் தற்போது பிரதேச செயலாளர்களில் வகுப்பு ஒன்றில் உள்ளவர்களுக்கு பிரதேச செயலாளர் பதவியும், மற்றையவர்களுக்கு மேற்படி பதவியை வகிக்கக்கூடியவாறான பதில் நியமனக் கடிதமும் உள்நாட்டு அலுவல்கள்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

### பதில் அரச அதிபர் நியமனம்;

## ஒருமாத தாமதத்தின் பின் வந்த நியமனக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பதில் அரசாங்க அதிபராக திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் அமைச்சினால்நியமிக்கப்பட்டு அதற்குரிய கடிதம் ஒரு மாத தாமதத்தின் பின்னர் நேற்று

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## உணவுப் பொருள்கள் பற்றாக்குறை; உடன் அனுப்ப ஏற்பாடு செய்க

### புதிய யாழ். அரச அதிபருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் அத்தியாவசிய பொருள்கள் அனைத்திற்கும் பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. உடனடியாக இப்பொருள்களை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும் என யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் புதிய அரச அதிபர் திரு. பொன்னம்பலத்திற்கு அனுப்பிவைக் கொள்கின்றனர்.

குறிப்பாக மா, சீனி, போன்ற பொருள்களுக்கு பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. சமீப காலமாக கப்பல் மூலமாக எடுத்துவரப்பட்ட பொருள்கள் போதாமல் உள்ளன. இதை நிவர்த்தி செய்ய உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது கிளிநொச்சியில் உள்ள அரசாங்க அதிபர், யாழ். மாவட்டத்தின் தேவைகள் பற்றி யாழ். செயலகத்

(6-ம் பக்கம் பார்க்க)

# புலிகள் - அரசு பேசுவதை இந்திய அரசு விரும்புகிறது

## கைதான விறகு வியாபாரி

# இந்திய அரசு விரும்புகிறது

## - வெளியுறவு அமைச்சர் கதிர்காமர்

(கொழும்பு)

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகள் தொடர்வதை இந்தியா விரும்புகின்றது. இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இந்தியா சமாதான முயற்சிகளில் எந்த வகையிலும் குறுக்கீடு எதையும் மேற்கொள்ளவில்லை. இந்தியாவுடனான இலங்கையின் உறவு தற்போது பகையற்றதாகவும் நல்ல நிலையிலும் இருக்கிறது எனவும் குறிப்பிட்டார்.

வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்த வார இறுதியில் பங்களாதேசத்திற்கும் அங்கிருந்து இந்தியாவில் புதுடில்லி மற்றும் சென்னை நகரங்களுக்கும் விஜயம் செய்ய இருப்பது தெரிந்ததே. இவ்விஜயம் தொடர்பாக அவர் வெளிநாட்டு பத்திரிகையாளர்களை சந்தித்துப் பேச்சு நடத்தினார். அப்போதே இவ் விபரங்களை வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# புலிகளுடனான பேச்சுவார்த்தையை ஆவலுடன் எதிர்பார்த்துள்ளேன்

## - ஜனாதிபதி சந்திரிகா

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் நத்தாருக்குமுன் ஆரம்பமாக இருக்கின்ற விடுதலைப்புலிகளுக்கும் - அரசாங்கத்திற்கும் இடையிலான இரண்டாம் கட்ட சமாதானப் பேச்சுக்களை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதாக ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

'தினமின' சிங்களப் பத்திரிகைக்கு அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளுடன் நடத்தப்படும் பேச்சுக்களே அர்த்தமுடைய சமாதான தீர்வொன்றை எய்துவதற்கு உதவும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கடந்த புதனன்று அமைச்சரவைப் பேச்சாளர் தர்மசிறி சேனநாயக்கா ஊடாக பத்திரிகையாளர்களுக்கு செய்தியொன்றை விடுத்து ளமை தெரிந்ததே.

# புலிகளுடனான பேச்சுவார்த்தை விபரம் உரிய நேரத்தில் வெளியிடப்படும்

## - தர்மசிறி சேனநாயக்கா

(கொழும்பு)

எம்மிடம் இரகசியம் இல்லை. ஆனால் சில நடவடிக்கைகளில் தந்திரம் அவசியம் விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்கள் பற்றி உரிய நேரத்தில் விபரங்கள் வெளியிடப்படும் என அமைச்சரவைப் பேச்சாளரான தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்

பத்திரிகையாளர் மகாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கே பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அப்போது அவரிடம் பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்விகளும் பதில்களும் வருமாறு;

கேள்வி- இராணுவ அதிகாரி ஒருவர் மூலம் பருத்தித்துறையில் வைத்து கடிதமெதுவும் பரிமாறப்பட்டதா?

பதில்- அதனை இப்போது வெளியிட முடியாது

கேள்வி- விடுதலைப் புலிகளின் தளபதி மல்லியின் கொலை தொடர்பாக விசாரணை நடத்துமாறு கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கோரியிருந்தாரா?

பதில்- அது தொடர்பாகவும் என்னால் எதுவும் கூற முடியாது

கேள்வி- பேச்சுவார்த்தை பற்றி மந்திரிசபை ஆராய்ந்ததா?

பதில்- மந்திரிசபைக்கு அறிவிக்காமலா ஜனாதிபதி செயற்படுகின்றார் ஜனாதிபதி எல்லோர் சார்பிலுமே செயற்படுகிறார் சில நடவடிக்கைகளை அவர் சமயோசிதமாக எடுக்க வேண்டியுள்ளது

கேள்வி- கிறிஸ்மசுக்கு முன்னரா? புதுவருடத்துக்கு முன்னரா பேச்சுவார்த்தை நடக்கும்?

பதில்- 94க்குப்பின் 95க்கு முன் என! அமைச்சர் பதிலளித்தார்

# வீரச்சாவு



லெப். பெரியதம்பி

யாழ்.மாவட்டத்தில்நேற்று சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலின் போது விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் பெரியதம்பி - றெஜினோல்ட் (மரியதாஸ் தருமகுலதாஸ் யாழ்ப்பாணம்) இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீர வணக்கம் செலுத்துகின்றனர்.

(6-ம் பக்கம் பார்க்க)

வாழ்வுப் பகுதியினர் புதிய அரச அதிபர் திரு. பொன்னம்பலத்திற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

பொதுமக்களின் நுகர்வுத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத அளவிற்கு பொருள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால் பெரும் நெருக்கடி ஒன்றை மக்கள் எதிர்

# புல்மோட்டையில் மோதல்; பொலிசார் ஒருவர் பலி

## ஒருவர் காயம்

(கொழும்பு)

புல்மோட்டை என்னும் இடத்தில் விடுதலைப் புலிகளுக்கும் பொலிஸாருக்கும் இடையே இடம்பெற்ற மோதலில் பொலிசார் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் மற்றுமொருவர் காயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

# படகுச்சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

ளன. இதை நவாதத செயய

# கைதான விறகு வியாபாரி இராணுவத்தால் விடுவிப்பு

(வடமராட்சி)

சிறிலங்கா இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த விறகு வியாபாரி ஒருவர் ஒருவார காலத்தின் பின்னர் நேற்று பலாலியில் வைத்து விடுவிக்கப்பட்டார்

தற்போது இடம்பெயர்ந்து மல்லாகத்தில் வசித்துவரும் கட்டுவனைச் சேர்ந்த சின்னத்தம்பி கனகசிங்கம் (வயது 13) என்பவரே விடுவிக்கப்பட்டவராவார்

விறகு தேடச்சென்றபோது கட்டுவன் பகுதியில் பதுங்கியிருந்த படையினரால் கடந்த 26ஆம் திகதி இவர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தார் (யோ)

### சுகாதாரம் பேணாமையால்

# இரண்டு பேக்கரிகள் உற்பத்தி இடை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள இரண்டு பேக்கரிகள் சுகாதாரத்தை பேணாததினால் அதன் உற்பத்தியைச் சுகாதாரப் பகுதியினர் நிறுத்தியுள்ளனர்.

இதேவேளை இணுவில் பகுதியில் உள்ள தனியார் உணவுச்சாலை ஒன்றும் சுகாதார குறைவு காரணமாக சுகாதார பகுதியினரால் மூடப்பட்டுள்ளது.

தற்பொழுது பேக்கரிகள் மற்றும் உணவுச்சாலைகள் சுகாதாரப் பகுதியினரால் திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறது. இதன்போது சுகாதாரத்தைப் பேணுமாறு உரிமையாளரிற்கு அறிவுரை கூறப்படுவதோடு சுகாதாரக் குறைவு காணப்படும் உணவகங்கள் பேக்கரிகளின் செயற்பாடுகள் இவர்களால் நிறுத்தப்பட்டு வருகிறது.

நேற்று முன்தினம் சுகாதாரப் பகுதியினரால் சுகாதாரம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனையில் யாழ்.மாநகரசபைக்குட்பட்ட பகுதியில் இரண்டு பேக்கரிகளிலும் இணுவில் பகுதியில் ஓர் உணவகமும் சுகாதாரம் திருப்திகரமாகப் பேணப்படாதது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதைத்தொடர்ந்து அவர்களால் இம்மூன்று நிறுவனங்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# மர்மமான முறையில் வியாபாரி மரணம்

(திருநெல்வேலி)

ஆனைக்கோட்டைப் பகுதியில் மரக்கறி வியாபாரி ஒருவர் மர்மமான முறையில் மரணமடைந்துள்ளார். இவரது மரணம் அப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருப்பதுடன் கொலையாக இருக்கலாம் என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

மர்மமானமுறையில்இறந்து கிடந்தவர் நல்லதம்பி பத்மநாதன் (வயது 44) எனத் தெரிவிக்கப்படுகிறது. நேற்று மாலை வரை இவரைக் காணாத இவரது மருமகள் இவரைத்தேடியன்னல்வழியே எட்டிப்பார்த்தபோது இவர் இறந்த நிலையில் காணப்பட்டாராம்.

இறந்து கிடந்தவரின் ஆண் உறுப்பு நசிக்கப்பட்டு இரத்தம் கசிந்த நிலையில் காணப்பட்டதாகவும், இவரது வாய்க்குள் துணி திணிக்கப்பட்டு சடலம் குப்பறக் கிடந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# வரி விளம்பரம்

## English Practice Personal Classes

பாடசாலை விடுதலையை முன்னிட்டு ஒரு மாதத்திற்கு பிரத்தியேக ஆங்கில வகுப்புக்கள், இலக்கணம் - வசனத் தொகுப்பு சிறு கட்டுரைகள் கற்பிக்கப்படும். தொடர்பு: க. சபாநாயகம்4பிள்ளையார் ஒழுங்கை, பலாலிறோட், திருநெல்வேலி. ஆரம்பம் 3-12-94 காலை 9.00 மணி. (10233)

## வெளிவந்து விட்டது

A. L. மாணவர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த உயர்தர மாணவர் பௌதிகம் வரிசையிலுள்ள சடப்பொருளின் இயல்புகள். கடந்தகால 1994 உட்பட வினாக்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அ. கருணாகரர். (10269)

## விற்பனைக்குண்டு

National வானொலிப் பெட்டிகள் இரண்டு விற்பனைக்குண்டு. தொடர்பு:- சந்தரட்னம் பரமசிவம், நவாலி வடக்கு, மானிப்பாய் (10271)

## விற்பனைக்கு

இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. சுத்தம்செய்து கொடுக்கப்படும். தொடர்பு:- 698/15 சபாபதி வீதி, தலையாழி, வைரவர் கோவிலுக் கண்மையில் யாழ். (10268)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Prima, Chris Thomby புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. சி. குலசிங்கம்9, நக்கா வீதி (Parக்கு முன்பாக) யாழ்ப்பாணம் (10270)

## பழைய சேலைகள் தேவை

பாவித்த நைலெக்ஸ்சேலைகள் விலைக்கு வாங்கப்படும். தொடர்பு: தமிழர் புனர்வாழ்வுக் கழகம். 83/2 காங்கேசன்துறை சாலை, கொக்குவில் மற்றும் எமது பிரிவுக் காரியாலயங்கள் சுன்னாகம், பருத்தித்துறை, நாகர்கோயில், பளை சாவகச்சேரி, பண்டிதர்குடியிருப்பு. (10219)

## WANTED TYPEWRITER
## உடனடியாகத் தேவை

ஒரு புதிய அல்லது நல்ல நிலையில் உள்ள ஆங்கில (PORTABLE) தட்டச்சு இயந்திரம் உடனடியாகத் தேவை. விற்பனைக்கு இருந்தால் தொடர்பு கொள்ளவும். முருகுப்பிள்ளை மணி-வாசகம் (மொழி பெயர்ப்பாளர்) தினேஸ் புத்தகசாலைஇல19, பழைய பஸ் நிலையம் யாழ்ப்பாணம் (10239)

## டிசம்பர் விடுமுறையில் பயிற்சி வகுப்புக்கள்

கேக்ஐசிங், சமையற்கலை, ஒப்பனைக்கலையும் தலை அலங்காரமும் ஒருமாதகால வகுப்புக்கள் 5.12.94 திங்கள் முதல் ஆரம்பமாக உள்ளன. விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும். Yogi Home Science Academy 71, நாயன்மார் வீதி, கச்சேரி நல்லூர் றோட் நல்லூர். (10241)

## நீரிழிவு ஔடதம்

நீரிழிவு நோயாளருக்கென பாவிக்கக் கூடிய ஆட்டாமா, குரக்கன்மா, ஒடியல் மா, மற்றும் வறுத்த உழுந்துமா, பச்சை உழுந்துமா, தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம் பெற்றுக் கொள்ளுமிடங்கள்; அண்ணா கோப்பிக் கடை (யாழ்ப்பாணம், திருநெல்வேலி, இணுவில்) (சி-10676)

# புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்-
கல்வி ஆண்டு 1995
சனி - ஞாயிறு முழுநேர
வகுப்புக்கள்

## O/L ஆண்டு 10, 9

ஆரம்பம் 5.12.94 திங்கள்
மாலை 4 மணி

கணிதம்

## தமிழீழ மாவட்ட நீதிமன்று, கிளிநொச்சி

# இடைக்காலத் தீர்வை

வழ. இல:- 21/94.
தன்மை:- மணநீக்கம்.

மா. ஞானசேகரம்,
விவேகானந்தநகர்,
கிளிநொச்சி.
வழக்காளி.

எதிர்:
ஞா. கிருஸ்ணலீலா,
கரவெட்டி மத்தி,
கரவெட்டி,
யாழ்ப்பாணம்.
எதிராளி.

இவ்வழக்கில் எதிராளிக்கு அழைப்பாணை சேர்ப்பிக்கப்பட முடியாதவிடத்து 19-08-94 20-08-94 யாழ் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்டு குறித்த 14நாள் கடந்தும் எதிராளியோ அவரது உறவினர்களோ தோன்றி மறுமொழி அணைக்காததால் இவ்வழக்கு ஒருமுக விளக்கத்திற்கு எடுக்கப்பட்டு வழக்காளியும் அவரது சட்டவாளர் திரு. சி. மணியரசன் அவர்களும் மன்றில் சமுகமாயிருக்க 21-10-94-ல் நீதியாளர் திரு. கோ. ஜனகன் அவர்கள் முன்னிலையில் ஒருமுக விளக்கம் நடைபெற்று பின்வருமாறு தீர்ப்பு வழங்கப்பட்டது.

வழக்காளியின் உரிமைக்கோரிக்கையின் 1-ம், 2-ம் பந்தியின்படி எதிராளி 07 வருடங்கள் வழக்காளியிடமிருந்து பிரிந்து வாழ்வதால் சட்டப்படியான நிரந்தர விவாகரத்து பெறவும், 10 வருடகாலமாககுழந்தையை தான் பாதுகாத்து வருவதால் குறித்த குழந்தையின் நிரந்தர பாதுகாவலர் வழக்காளியே என்று கட்டளை பெறவும், இவ்விடைக்காலத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற கட்டளைப்படி,
பதிவாளர்

(10277)

## உங்கள் அபிமான அந்தியகால நண்பன் "ஒளி இல்லம்"

புதிய பெயர் மாற்றத்துடன்
அந்தியகால சேவைகளைச் செய்து வருகிறது

# "புதிய இல்லம்"

இனி நீங்க்ள் ஞாபகம்
வைத்திருக்க வேண்டிய பெயர்

# "புதிய இல்லம்"

210, பிரதான வீதி
(புனித யாகப்பர் ஆலயப் பக்கம்)
யாழ்ப்பாணம்

(சி-10827

## விளையாட்டு உபகரணம் வழங்கப்பட்டது

யாழ். பிரதேச செயலாளர் பணிமனைக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு யாழ். பிரதேச செயலகம் இவ்வாண்டுக்கான விளையாட்டு உபகரணங்களை அண்மையில் வழங்கியுள்ளது.

இந்நிகழ்வு யாழ். பிரதேச செயலாளர் கலாநிதிக. குணராசா தலைமையில் இடம்பெற்றது.

இப்பிரிவுக்கு உட்பட்ட மொத்தம் 21 விளையாட்டு கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதாக யாழ். பிரதேசசெயலக விளையாட்டு அதிகாரி அறிவித்துள்ளார். (24)

## அடையாள அட்டைகள் வந்துள்ளன

தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பம் செய்தவர்களின் ஒரு தொகுதி அடையாள அட்டைகள் கொழும்பிலிருந்து யாழ். செயலக ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு வந்து சேர்ந்துள்ளதாக அறியவருகிறது.

இவற்றை சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களுக்கு விரைவில் அனுப்பிவைப்பதற்கான பூர்வாங்க வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஆட்பதிவுத் திணைக்கள வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. (41)

## விளையாட்டு அதிகாரி நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திற்கென நிரந்தர மாவட்ட விளையாட்டதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் இதுவரை பதில் கடமை புரிந்த உத்தியோகத்தர் கிளிநொச்சி மாவட்டத்திற்கு மாற்றம் செய்யப்பட்டிருப்பதாகவும் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ் மாவட்ட மெய்வல்லுனர் பயிற்சியாளராக தற்போது கடமையாற்றும் திரு. கே. டபிள்யூ. விமலராஜன் அவர்களே புதிய மாவட்ட விளையாட்டதிகாரியாக நியமனம் செய்யப்பட்டவராவார்.

யாழ் மத்திய கல்லூரியில் கற்றுத்தேறிய இவர் தேசிய மட்ட விருதுகளை பெற்றிருந்ததும் யாழ் மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுனர் சங்க தொழில் நுட்ப முகாமையாளராகவும் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது

# நினைவு கூருகின்றோம்...

## 03.12.1994

1984 -ம் ஆண்டு இதே தினத்தில் தமிழகத்தில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த,

**நிசாம்** (சீனித்தம்பி குமார் -பொத்துவில்-அம்பாறை)

1985 -ம் ஆண்டு முல்லைத்தீவு - தண்ணிமுறிப்புப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் வீரச்சாவெய்திய,

**கேசவன்** (நல்லையா அருள்நேசன்- வண்ணாங்கேணி - பளை)

பளைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய,

★ **சுந்தரி** (வீரசிங்கம் சுந்தரராஜன் - இயக்கச்சி)

1986 -ம் ஆண்டு மட்டு - வாழைச்சேனைப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**இராசமணி** (நடராசா இராசநாயகம் - கண்ணகிபுரம், வாழைச்சேனை - மட்டு)
(இராஜசெல்வம் - அமிர்தகழி - மட்டு)

1988 -ம் ஆண்டு நாவற்குழிப் பகுதியில் இந்தியப் படையினர், ஈ. பி. ஆர். எல். எவ் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**லெப். அருள் - யோகம்** (நவரட்ணம் அருட்செல்வம் - நாவற்குழி தெற்கு - சாவகச்சேரி)

கீரிமலை, கருகம்பனையில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளர்

**அண்ணா** (சிவதாசன் நிர்மலன் காங்கேசன்துறை யாழ்)

1991 -ம் ஆண்டு மன்னார் - சிலாவத்துறை முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினருடன் அகத்திமுறிப்புப் பகுதியில் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். மங்களன்- ரஞ்சித்** (சின்னத்துரை விமலேஸ்வரன் - கித்துள் - மட்டு)

**கப்டன் பாவலன் - ஜிம்மால்** (பூபாலப்பிள்ளை ஜெகதீஸ் - புதுக்குடியிருப்பு - மட்டு)

1992 -ம் ஆண்டு 02. 12 92 அன்று வவுனியா - மன்னார் எல்லையில் நடைபெற்ற சிறிலங்கா இராணுவமுகாம் மீதான தாக்குதலின் போது விழுப்புண்ணடைந்து வீரச்சாவெய்திய,

**அமுதராசன் - அமுதன்** (இராசரத்தினம் கணேசலிங்கம் - 7-ம் வட்டாரம் - புங்குடுதீவு)

இதே தினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும், கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினராலும், இந்தியப்படையினராலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி- 10821)

## வெதுப்பக உரிமையாளர்களுக்கு
# அன்பான வேண்டுகோள்

களஞ்சியத்திலிருந்து எமது சங்கத்திற்கு வழங்கப்படும் மாவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால், மக்கள் நலன் கருதி தங்களுக்கு விநியோகிக்கப்படும் முழு மாவினையும் வெதுப்பி உற்பத்திக்கு மாத்திரமே பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

ஆரம்பம் 5.12.94 திங்கள்
மாலை 4 மணி

கணிதம்

## திரு. சதீஸ், திரு. சங்கர்

விஞ்ஞானம்

திரு. இரா. செல்வவடிவேல்

## திரு. தயாநிதி

தமிழ்:- திரு ஆர்த்திகன்
ஆங்கிலம்:- திரு- கிரிதரன்
சமூகக்கல்வி:- திரு. கியூபேட்
வர்த்தகம்:- திரு. அற்புதராஜா
சைவசமயம்:- திரு. கிரிதரன்
கிறிஸ்தவம்:- திரு. கொலின்ஸ்

(சி/10826)

(புனித யாகப்பர் ஆலயப் பக்கம்)
யாழ்ப்பாணம்

(சி-10827

சங்க தொழில் நுட்ப முகா மையாளராகவும் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது

## நவம்பர் மாத அதிர்ஷ்டசாலிகள்

1-ம் பரிசு இல. 8239 திரு. A. A. ஜோர்ச்
சங்கானை றோட்
அச்சுவேலி.

2-ம் பரிசு இல. 8347 வினோ
கலை பண்பாட்டு கழகம்,
தீவகம்.

3-ம் பரிசு இல. 8384 A. அருள்வதனன்
அளவெட்டி

நீங்களும் அதிர்ஷ்டசாலிகள் ஆவதற்கு
எழிலகத்தில் கொள்வனவு செய்யுங்கள்

**எழிலகம்**
லெப்.இளங்கோ தெரு,
யாழ்ப்பாணம்.

(சி-10828)

களஞ்சியத்திலிருந்து எமது சங்கத்திற்கு வழங்கப்படும் மாவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால், மக்கள் நலன் கருதி தங்களுக்கு விநியோகிக்கப்படும் முழு மாவினையும் வெதுப்பி உற்பத்திக்கு மாத்திரமே பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

ஸ்பெசல் வெதுப்பி, இனிப்பு வெதுப்பி, பணிஸ், கேக்வகைகள் (அடைகேக் உட்பட), கல்பணிஸ் மற்றும் இதுபோன்ற ஆடம்பர உணவுப் பொருள்களின் உற்பத்தியை நாளை 04-12-94 ஞாயிற்றுக்கிழமையிலிருந்து மறு அறிவித்தல் வரை நிறுத்தி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

எக்காரணம் கொண்டும் வெதுப்பியின் நிர்ணயிக்கப்பட்ட நிறை, விலை ஆகியவற்றில் மாற்றம் செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும்.

தலைவர்,
யாழ். மாவட்ட
வெதுப்பக உரிமையாளர்
சங்கம்.

183, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(சி-10830)

## கண்ணீர் அஞ்சலி

### உயர்திரு.சி.சடாட்சரசண்முகதாஸ்

B-A-(Cey) S-L-A-S

முன்னாள் யாழ். செயலக தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபரும், உள்துறை அமைச்சின் செயலாளரும், தற்போதைய வட-கிழக்கு மாகாண சபையின் கல்வி கலாசார அமைச்சின் பிரதிச் செயலாளரும், கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளருமாகிய உயர்திரு.சின்னத்தம்பி சடாட்சரசண்முகதாஸ் அவர்கள் 1994-11-30-ந்திகதி இறைவனடி எய்திய செய்தியைக் கேட்டு நாங்கள் மிகவும் அதிர்ச்சியடைந்தோம்.

எமது ஆழ்ந்த துயரத்தையும், அனுதாபங்களையும், அன்னாரது குடும்பத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும்
அலுவலக, வெளிக்கள
உத்தியோகத்தர்களும்
வலிகாமம் வடக்கு,
தெல்லிப்பளை.

வலிகாமம் வடக்கு பிரதேச செயலக
நலன்புரிச் சங்கம்,
வலிகாமம் வடக்கு,
தெல்லிப்பளை.

(10275)

# எடிசன் அக்கடமி

(யாழ். இந்து அருகில்)
411/1, கே. கே. எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

(கொக்குவில் இந்து அருகில்)
27, கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.

## கல்வி ஆண்டு - 1995

### ஆண்டு 4 முதல் O/L வரையான வகுப்புகள்


| | | | |
|---|---|---|---|
| கணிதம் | -B. P. பாஸ்கரன் | கணிதம் | -B. P.பாஸ்கரன் |
| விஞ்ஞானம் | - J. J. கொலின்ஸ் / N. மகேந்திரன் | விஞ்ஞானம் | - N. மகேந்திரன் / J. J.கொலின்ஸ் |
| சமூகக்கல்வி | - K. S.முத்துலிங்கம் | சமூகக்கல்வி | - க. கோபி |
| தமிழ் | - S. கதிர்காமத்தம்பி | தமிழ் | - S- கதிர்காமத்தம்பி |
| ஆங்கிலம் | - J. மனோரஞ்சன் | ஆங்கிலம் | - C. சத்தியமூர்த்தி |
| வர்த்தகம் | - A. விக்கி | வர்த்தகம் | - T. அரவிந்தன் |
| சமயம் | - K. இராஜலிங்கம் | சமயம் | - K. இராஜலிங்கம் |

★ O/L இற்கு கணிதம் - விஞ்ஞானத்தில் ஆண்டு 9, 10 பாடத்திட்டமும் மீட்கப்படும்

**ஆரம்பம்: 04.12.1994 ஞாயிறு மு. ப. 9.30**

(சி-10820)

## இதய அஞ்சலி



### திரு.சி.சடாட்சர சண்முகதாஸ்

வடக்கு - கிழக்கு மாகாணசபையின் முன்னாள் உள்ளூராட்சி ஆணையாளரும், கல்வி அமைச்சின் மேலதிக செயலாளரும், உள்துறை அமைச்சின் பிரதிச் செயலாளருமான திரு.சி.சடாட்சர சண்முகதாஸ் அவர்களின் திடீர் மறைவுக்காக எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்து கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்ளுவதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மாநகரசபை ஆணையாளரும்,
பணியாளர்களும்.

(10276)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# விஞ்ஞானம் O/L மாணவர் அரங்கு

## பகுதி I

1. அமுக்கத்தின் சர்வதேச அலகு ''பஸ்கால்'' ஆகும் ஒரு பஸ்கால் இற்குச் சமனானது,
   1. மீற்றர் ஒன்றிற்கு ஒரு நியூற்றன்
   2. சதுர மீற்றரொன்றிற்கு நியூற்றன்
   3. ஒரு நியூற்றனுக்கு மீற்றர்
   4. ஒரு நியூற்றனுக்கு சதுர மீற்றர்

2. பின்வருவனவற்றுள் காற்று, நீர் விலங்குகளினால் பரவலடையும் கனிவித்துக்களை கொண்டுள்ளது எது
   1. தாமரை, தேங்காய், ஒட்டொட்டி
   2. மூக்குத்திப்பூண்டு, காசித்தும்பி, ஆமணக்கு
   3. மா, றப்பர், மூக்குத்திப்பூண்டு
   4. மூக்குத்திப்பூண்டு, தேங்காய் ஒட்டொட்டி

3. ஒழுங்குமுறையில் கீழ்காணும் இயல்புகளைக் காட்டுவன.
   (i) நீருடன் தாக்கமுற்று புதிய விளைபொருளைக் கொடுப்பது
   (ii) நீரில் கரையும்போது வெப்பத்தை வெளிவிடுவது
   (iii) நீரை உறிஞ்சுவது
   1) கல்சியம் காபைட்டு, சோடியம் ஐதரொட்சைட்டு, கல்சியம் குளோரைட்டு
   2) கல்சியம் குளோரைட்டு, சோடியம் ஐதரொட்சைட்டு, கல்சியம் காபைட்டு
   3) சோடியம் குளோரைட்டு, கல்சியம் குளோரைட்டு, கல்சியம் காபைட்டு
   4) கல்சியம் குளோரைட்டு, கல்சியம் காபைட்டு, சோடியம் ஐதரொட்சைட்டு

4. லினியஸ் இன் பெயரீட்டின்படி பூனையின் இனப்பெயரை சரியாகக்காட்டுவது பின் வருவனவற்றுள் எது
   1. Felis 2. **FELIS** 3. **domestica** 4. **DOMestica**

5. தரப்பட்ட திண்மக்கரைசல் சோடிகள்ஒவ்வொன்றும் சோதனைக்குழாயில் கலக்கப்பட்டால் எச்சோடிகள் வீழ்படிவைத்தரும்.
   1. சோடியம் ஐதரொட்சைட்டும் அலுமினியம் குளோரைட்டும்
   2. அமோனியம் குளோரைட்டும் செப்புசல்பேற்றும்
   3. செப்புசல்பேற்றும் பொற்றாசியம் காபனேற்றும்
   4. பொற்றாசியம் காபனேற்றும் சோடியம் ஐதரொட்சைட்டும்

6. ஒரு மூலகம் x இன் அணுவெண் g, x உம் அதன் சேர்வைகளும் பின்வரும் இயல்புகளில் எவற்றைக் கொண்டிருக்கும் என எதிர்பார்ப்பீர்.
   அ) x ஆனது அறை வெப்பநிலையில் திண்மமாக இருக்கும்
   ஆ) x ஆனது ஈரணு மூலக்கூறுகளாக இருக்கும்
   இ) 17ஐ. அணுவெண்களாகக் கொண்ட மூலகம் y ஆனது N1x இன் நீர்க்கரைசலினின்றும் xஐ இடம்பெயர்க்கும்
   ஈ) x ஆனது நீருடனும் காரத்துடனும் தாக்கமுறும்
   (1) அ. ஆ. மாத்திரம்
   (2) ஆ. ஈ. மாத்திரம்
   (3) இ. ஈ. மாத்திரம்
   (4) ஈ. அ. மாத்திரம்

7) அரிசியை வாயில் இட்டபோது இனிப்பானசுவை உணரப்படுகின்றது. இம்மாற்றத்தை உருவாக்கும் பதார்த்தம் என்ன?
   1) இலிப்பேசு 2) தயலின்
   3) மொல்றேசு 4) சுக்குறேசு


8) பச்சை நிறத்தாவரங்களிலே காபோவைதரேற்று ஆக்கும்போது பக்க விளைபொருளாக ஒட்சிசன் எதிலிருந்து வருகின்றது.
   1) காபனீரொட்சைட்டு
   2) நீர்
   3) காபனீரொட்சைட்டு, நீர்
   4) வளியுட் காணப்படும் ஒட்சிசன்

9. இறப்பர் நாடா ஒன்றின் சாதாரண நீளம் 10 M ஆகும். அதன் ஒரு நுனியை கையில் பிடித்துக்கொண்டு மறுநுனியில் 12 கிராம் நிறையை தொங்கவிட்டால் அதன் நீளம் 12Cm ஆகியது. பின் இந்நிறையை அகற்றி 3 கிராம் நிறையை தொங்கவிட்டால் அதன் நீளம்.

   1) 10CM 2) 10.2CM 3) 10.5CM 4) 11CM

10. $m + x_2 \rightarrow mx_2$ (m=12, x=16) பின்வருவனவற்றுள் எது மேலே தரப்பட்ட சமன்பாடு பற்றிய சரியான கூற்று.
   1) m இனது 1 மூலானது x ஆனது ஒரு மூல் அணுக்களுடன் தாக்கம் புரிந்து $mx_2$ இனது 1 மூல் மூலக்கூற்றுக்களை ஆக்கும்
   2) m இனது 1மூலானது X இனது 2 மூல்களுடன் தாக்கம் புரிந்து $mx_2$ இனது 3 மூல்களை ஆக்கும்.
   3) m இனது 12 கிராம் ஆனது x இனது 16 கிராம் உடன் தாக்கம் புரிந்து $mx_2$ இன் 28 கிராம் ஆகும்.
   4. m இனது 12 கிராம் ஆனது x இனது 32 கிராம் உடன் தாக்கம் புரிந்து $mx_2$ இன் 44 கிராம் ஆகும்

11. படத்தில் காட்டிய மின் சுற்றில் அம்பியர் மானியும் தடையும் கல வடுக்கின் தடையும் பூச்சியம்என கொள்க.




ஆளி S மூடப்பட்டிருக்கும் போது அம்பியர் மானி A, இன் அவதானம் யாது?
   1) 0.1A (2) 0.2 A (3) 0.4A (4) 1.25A

12. சிறுவன் ஒருவனை நாய் துரத்தத்தொடங்கியதும் அவனது இதயத் துடிப்பு வீதமும், சுவாச வீதமும் அதிகரித்தது. இம்மாற்றத்தை உண்டாக்குவதற்கு அவன் உடலில் பின்வரும் எச்சுரப்பி தொழிற்பட்டிருக்கும்?
   1) கபச்சுரப்பி
   2) தைரொயிட்டு சுரப்பி
   3) அதரீனற் சுரப்பி
   4) இலங்க஗ான்சு சிறுதீவுகள்

13. A.B ஆகிய மூலகங்களின் அணு எண்கள் முறையே 1.6 ஆகும் A யும் B யும் சேர்ந்து சேர்வையை உருவாக்குமாயின் அச்சேர்வை கொண்டுள்ள பிணைப்பு வகையும் சூத்திரமும் முறையே
   1) அயன் பிணைப்பு AB
   2) அயன் பிணைப்பு BA
   3) பங்கீட்டுப் பிணைப்பு $BA_4$
   4) பங்கீட்டுப் பிணைப்பு $AB_4$

14. பின்வருவனவற்றுள் எது சுவாசத்தில் இலத்திரிக் அமிலம் உண்டாகுவதற்கு காரணமாக அமையலாம்.
   1) குறைந்த $O_2$ இன் அளவு
   2) உயர்ந்த $CO_2$ இன் அளவு
   3) உயர்ந்த குருதி அமுக்கம்
   4) உயர்ந்த உடல் வெப்பநிலை

15.

| பதார்த்தம் | பதார்த்தம் எவ்வுணவில் உணவில் சேர்க்கப்படாததால் ஏற்படும் விளைவு | அதிகமாகக் காணப்படல் |
|---|---|---|
| கல்சியம் | குருதி உறைதல் தடைப்படல் | நெத்தலிக் கருவாடு |
| பொசுபரசு | எலும்புகள் சாதாரண வளர்ச்சியடையாமை | X |
| காபோவைதரேற்று | Y | சோறு |

X,Y ஆகிய இடைவெளிகளில் வரக்கூடிய உணவும் நோயும் முறையே.
   1) ஈரல், முரசு கரைதல்
   2) பசளி, குருதிச்சோகை
   3) மீன், சக்திக்குறைபாடு
   4) தீட்டாத அரிசி, கண்குறைபாடு

16. புதுவருடதினத்தன்று தம்பி ராஜனிற்கு வாணவேடிக்கை காட்ட விரும்பிய குகன் பொட்டாசியம் நைதரேற்று என நினைத்து சோடியம் நைதரேற்றைச் சேர்த்து இருந்தான். அவன் வாணத்தைக் கொளுத்திய போது அவன் எதிர்பார்த்த எந்த நிறம் காணப்படவில்லை.
   1) மஞ்சள்
   2) அப்பிள் பச்சை
   3) நீலம்
   4) ஊதா

தொகுப்பு:
**இரா. அருட்செல்வம்**
(இணுவில்)


17. ஒருவரிடமிருந்து இரு வழிகளில் பெற்ற குருதி மாதிரிகளின் ஒன்றிற்குச் சோதனை நீர்ப்பாயம் A யும் மற்றப்பகுதிக்கு B யும் சேர்க்கப்பட்டபோது இரண்டிலும் ஒருங்கொட்டல் ஏற்பட்டது. அக்குருதியினம் பின்வருவனவற்றில் எது
   1. A 2. B 3. AB 4. O

18. A, B, C, D என்னும் மண்வகைகள் எடுக்கப்பட்டு சமகனஅளவு நீர் இவற்றுள் எடுக்கப்பட்டபோது வடித்த திரவத்தின் கனஅளவு அட்டவணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது

| மண் வகை | கனஅளவு | சேர்க்கப்பட்டநீரின் கனஅளவு | வடித்த நீரின் கனஅளவு |
|---|---|---|---|
| A | $20cm^3$ | 100ml | 30. 0 ml |
| B | $20cm^3$ | 100ml | 40. 20 ml |
| C | $20cm^3$ | 100ml | 80. 60 ml |
| D | $20cm^3$ | 100ml | 60. 40 ml |

ஏறுவரிசையில் நீர் உறிஞ்சும் தன்மையுள்ள தொகுதி
   1. A, B, C, D 2. D, B, C, A
   3. C D, B, A 4. A, B, D, C

19. ஒரு வான் தகடு படத்தில் காட்டியவாறு இரு மரத்துண்டுகளுக்கிடையே பொருத்தப்பட்டுள்ளது. இவ்வலகானது A யை ஒரே திசையில் 50முறை கடக்க 10 செக்கன் எடுத்தது. இவ்வலகின் அலைவு காலம் யாது




   1. 5/10 2. 1/5 3. 50 4. 10

20. சுவாசப் பரிசோதனை ஒன்றில் பின்வரும் தரவுகள் பெறப்பட்டன
   உட்சுவாசம் நிமிடம் ஒன்றிற்கு = 20
   ஒவ்வொரு உட்சுவாசத்திலும் எடுக்கப்பட்ட வளியின் கனவளவு = $500cm^3$
   உட்சுவாச வளியிலுள்ள $O_2$ நூற்றுவீதம் = 20%
   வெளிச்சுவாச வளியிலுள்ள $O_2$ நூற்றுவீதம் 14%
இவற்றிலிருந்து ஒரு நிமிடத்தில் அவரின் குருதியில் சேருகின்ற $O_2$ வின் கனஅளவு
   1. 40ml 2. 160ml
   3. 600ml 4. 1000ml

(4 ஆம் பக்கம் பார்க்க)

(b)




# கணிதம் O/L

30-11-94 இன் தொடர்ச்சி)

$$S_n = a\frac{\left(r^{n}-1\right)}{r-1}$$

$$= 8\frac{\left[\left(3/2\right)^{7}-1\right]}{3/2-1}$$

$$= \frac{8 \times 2059 \times 2}{128}$$

$$= 257\frac{3}{8}$$

ii) $\Delta ABC$ யிற்கு பைதகரசின் தேற்றப்படி.

$AC^2 = AB^2 + BC^2$

$AC^2 = 28^2 + 21^2$

$AC^2 = 784 + 441$

$AC^2 = 1225$

$AC = \sqrt{1225}$

AC 35cm

$\Delta ABC$ யின் பரப்பு

$= \frac{1}{2} \times$ அடி $\times$ செங்குத்துஉயரம்

$= \frac{1}{2} \times 21 \times 28$

$= 294\ cm^2$

அரைவட்டம் BPCயின் பரப்பு

$= \frac{1}{2}\pi r^2$

$= \frac{1}{2} \times \frac{22}{7} \times \frac{21}{2} \times \frac{21}{2}$

$= 173.25\ cm^2$

அரைவட்டம் AQCயின் பரப்பு

$= \frac{1}{2}\pi r^2$

$= \frac{1}{2} \times \frac{22}{7} \times \frac{35}{2} \times \frac{35}{2}$

$= 481.25\ cm^2$

∴ குறுக்குவெட்டு முகப்பரப்பு

$294 + 173.25 + 481.25$

$= 948.5 cm^3$

∴ இதன் கனஅளவு

$= 948.5 \times 7$

$= 6639.5 cm^3$

∴ எஞ்சிய கன அளவு

$= 6639.5 - 479.5$

$= 6160 cm^3$

இவ் உலோகத்தின் கன அளவை உருளையின் கன அளவுக்கு சமப்படுத்த

$V = \pi r^2 h$


$6160 = \frac{22}{7} \times 14 \times 14 \times h$

$h = 10$ cm.

12-வது வினாவின் விடை

(a

(1)




(2) பரப்பு

$\Delta ABE = \frac{1}{2} \times 24 \times 10$

$120\ cm^2$

உரு ACDB இன் பரப்பு


$= (\frac{1}{2} \times 12 \times 14) + (\frac{1}{2} \times 20 \times 6) + (\frac{1}{2} \times 8 \times 4)$

$= 84 + 60 + 16$

$= 160\ cm^2$

∴ மொத்த பரப்பு $= 160 + 120$

$= 280\ cm^2$




$\sin 14 = \frac{AN}{250}$

$0.2419 = \frac{AN}{250}$

$0.2419 \times 250 = AN$

$60.47$ m $= AN$

$\sin 76 = \frac{BN}{250}$

$0.9703 \times 250 = BN$

$242.57$ m $= BN$

$\tan 40 = \frac{CN}{242.57}$

$0.8391 \times 242.57 \quad CN$

மடக்கை வாய்பாட்டை உபயோகித்து சுருக்குக.

$CN = 203.6$

ஆகவே $AC = CN - AN$

$= 203.6 - 60.47$

$AC = 143.13$m

$C\hat{O}M = \theta$ என்க

$\tan\theta = \frac{CM}{OM}$

$= \frac{353.6}{300}$

$\tan\theta = 1.1786$

$\theta = 49°40''$


## நா. முருகானந்தன்

சங்கானை

∴ O இல் இருந்து C இன் ஏற்றக்கோணம் 49° 40''

வினா (5)


(6) ஒரே அடி மீதும் ஒரே இரு சமாந்கர நேர் வரைகளுக்குள்ளும் அமைந்த முக்கோணிகள் பரப்பில் சமன்




(2) இருகோடுகள் AD, AB வெட்டும் போது அவற்றில் இருந்து சமதூரத்தில் இருக்கும் புள்ளியின் ஒழுக்கு $B\hat{A}D$இன் இருகூறாக்கியாகும். (வரைவதற்கு)

(3) இரு நிலையான புள்ளிகள் B, D இல் இருந்து சமதூரத்தில் இருக்கும் புள்ளியின் ஒழுக்கு கோடுBDஇன் செங்குத்துஇருகூறாக்கியாகும்

வினா (4) இன் வரைபு



# தமிழ்மொழி (O/L) பகுதி II ற்கான பரீட்சை வழிகாட்டி குறிப்புகள்

O/L தமிழ்ப் பாடத்தில் அதிக புள்ளிகளை ஈட்டித்தருகின்ற பகுதி இரண்டு வினாக்கள் இன்றைய மாணவர்களால் பெருமளவு புள்ளிகளைக் கோட்டை விடுவதாகக் காணப்படுகின்றது. இப்பகுதியில் மூன்று வினாக்கள் இடம் பெறுகின்றது. கட்டுரைஎழுதுதல் 20 புள்ளிகளையும் கடிதம் எழுதுதல் 10 புள்ளிகளையும் சுருக்கமெழுதுதல் 10புள்ளிகளையும் கொண்டு காணப்படுகின்றது. இவ் வினாக்கள் மாணவர்களது புலமையைப் பதம் பார்ப்பதாகவே பெருமளவிற்கு அமைகின்றது இப்பகுதியில் மாணவர்கள் தமது பெருமளவு புள்ளிகளை இழக்கின்ற காரணத்தால் இந் நிலையை ஓரளவாவது நிவர்த்தி செய்யும் நோக்கோடு இக் கட்டுரை எழுதப்படுகின்றது.

**கட்டுரை:-**

பகுதி இரண்டில் இடம் பெறும் முதலாவது வினா கட்டுரை எழுதுதல். இது மாணவர்களது பொதுவான வாசிப்புத் திறனையும் எழுத்தாற்றலையும் சோதிப்பதாக அமைகிறது. ஒரு பொருள் பற்றி நாம் மனதில் எண்ணிய எண்ணங்களை ஒழுங்குபட உரைநடையில் அமைப்பதே கட்டுரையாகும். நயம்பட பேசுவது போலவே திறம்பட எழுதுவதும் ஒரு கலைதான் குறித்த பொருள் பற்றி நாம் விரிவாக எவ்வளவோ அறிந்து வைத்திருந்தாலும் அதைப்பிறர் விரும்பிப் படிக்கும் வகையில் எழுதுதல் இலகுவான காரியமல்ல. சிந்தித்து கருத்துக்களை ஒழுங்கு படுத்திய பின்னரே எழுதத் தொடங்குதல் வேண்டும்.

கருத்தை வெளியிடுவதற்கு இலக்கண அமைதி பெற்ற வாக்கியங்களே. ஏற்றவை திணை, பால், ஒருமை, பன்மை, மரபு ஆகியவற்றின் முடிபு பிழைபோகாது வாக்கியங்களை அமைக்க வேண்டும் எளிதான இனிதான, ஒழுங்குடைய வாக்கியங்களே சிறந்தவை இவையே உங்கள் கட்டுரைகளுக்கு அழகையும் சுவையையும் தரவல்லவை

கட்டுரை பிரதானமாக பொருட் சிறப்பு உடையதாக அமைதல் வேண்டும் தெரிவு செய்து எழுதும் தலைப்பினை முழு அளவில் பிரதிநிதித்துவப் படுத்துவதாக கட்டுரையின் பொருள் அமைய வேண்டும். பந்தி பிரித்து எழுதுதல் கட்டுரைக்கு மிகவும் இன்றியமையாத பண்புகளில் ஒன்று. பந்திகள் ஒன்றோடு ஒன்று தொடர்புடையனவாக தொடுத்துச்செல்லவேண்டும். ஒரு பந்தியின் கருத்தை மறு பந்தியில் விபரிப்பதாக அமைதல் கூடாது. ஒவ்வொரு கருத்தை ஒவ்வொரு பந்தியில் கூறுதல் வேண்டும் பந்தியின் அளவு பற்றிச் சிந்திக்க வேண்டியதில்லை. பந்தி தொடங்கும் போது முதல் வரிகள வலப்பக்கமாகச் சற்றுத் தள்ளித் தொடங்க வேண்டும். இது பார்வைக்கு அழகைத் தரும். மாணவர்கள் பெருமளவு புள்ளிகளை இப்பகுதியில் இழக்கக் காரணம் எழுத்துத் தெளிவின்மையும், எழுத்துப் பிழைவிடுவதும். இவற்றிலும் கட்டுரை எழுதும் போது அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். இவ் விலக்கணங்கள் எல்லாவகையான கட்டுரைகளுக்கும் பொருந்தும்.

கட்டுரையைப் பொறுத்த மட்டில் பல மாணவர்கள் கட்டுரையை எவ்வாறு ஆரம்பிப்பது என்பதிலேயே அதிகளவு நேரத்தைச் செலவு செய்து விடுகின்றனர். தரப்பட்ட தலைப்பினை விளக்குவதாக உங்கள் கட்டுரையை ஆரம்பிக்கலாம்.

கட்டுரைகள் முகவுரை, உடல், முடிவுரைகள் என்பவற்றைக் கொண்டு அமைந்து காணப்படும். முகவுரை தரப்பட்ட தலையங்கத்தினை வாசிப்பவருக்கு அறிமுகப் படுத்துவதாக அமைய வேண்டும். எல்லாக் கட்டுரைகளும் முகவுரையுடனேயே ஆரம்பிக்க வேண்டும் என்பதற்கில்லை. வர்ணனைக் கட்டுரைகளைப் பொறுத்த மட்டில் முகவுரை இன்றியும், ஆரம்பிக்கலாம். முகவுரையில் கூறப்பட்ட விடயங்களை உடல் பகுதியில் தெளிவாக விபரித்துக் கூறி இறுதியாக முடிவுரை அமைத்தல் வேண்டும். முடிவு இல்லாதது குறைப் பொருள கட்டுரைக்கு நிறைவு வேண்டும். இந்த நிறைவு கருத்தினை நிறைவு செய்வதாக அமைய வேண்டும். முதலில் தொகுத்துக் கூறி இடையிலே விளக்கிக் கூறி இறுதியில் முடித்துக் கூறுதல் கட்டுரைக்கு அழகு.

**கடிதம்:-**

தமிழ் மொழிப்பகுதி இரண்டில் இரண்டாவதாக இடம் பெறும் வினா இது. இதில் மாணவர்களால் பெரிதும் தேர்ந்தெடுக்கப்படுவது கடிதம்எழுதுதலேஇவ்வினாவைப் பொறுத்தமட்டில் மாணவர்கள் பலரும் கடிதத்தின் அமைப்பு முறையை ஓரளவுக்குச் சரியாக எழுதினாலும் கடிதத்தின் உடற்பகுதி மிகவும் சுருங்கியதாகவும், செய்திகள் அற்றதாகவும் காணப்படுகின்றது

கடிதங்கள் பல பிரிவுடையன. அவற்றின் பொதுவான சில; பண்புகளை மட்டும் இங்கே நோக்குவோம்.

முக்கியமாக கடிதம் நான்கு பகுதிகளை உள்ளடக்கிக் காணப்படும். அவை முகப்பு, உடல், முடிப்பு, முகவரி என அமையும். அவற்றிலே முகப்பிலே கடிதம் எழுதுவோர் தனது விலாசத்தை கடிதத்தின் மேல்புற வலது மூலையிலே எழுதுதல் வேண்டும். அடுத்து தனது விலாசத்தின் கடைசி வரிக்கு அடுத்த வரியிலே இடது பக்கத்தில் சற்று இடம் விட்டு யாருக்கு எழுதுகிறோமோ அவரை விளித்தல் வேண்டும். உறவினருக்கு எழுதும் போது முறைப்பெயரையே விளிக்க வேண்டும். பெரியோருக்காயின் பன்மைப் பெயரால் விளிக்க.

தந்தையீர், அன்னையீர்,
அடை சேர்த்து எழுதுதலும் நன்று
அருமைத் தமையனாருக்கு,

அடுத்ததாக கடிதத்தின் உடல் அமையும். இதிலேயே செய்தி கூறப்படும். இங்கே இடம் பெறும் சொற்களே எண்ணப்படும். பெரும்பாலும் நூறு சொற்கள் வரையில் எதிர்பார்க்கப்படும். செய்தி எழுதத் தொடங்கும் முன் நலம் கூறித் தொடங்குக.

அருமை நண்ப, நான் நலம்.

செய்திகள் எளிய சொற்களால் அமைக்கப்படுதல் நன்று. செய்திகளுக்கு ஏற்ப பந்தி பிரித்து தெளிவாக எழுதுதல் உங்கள் புள்ளிகளை நீங்கள் பெற வழி சமைக்கும்.

முடிப்பு. இதுவும் கடித உறுப்புக்களில் பிரதானமானது. இது கடிதத்தின் வலதுபக்க கீழ் மூலையில் எழுதப்படும். எழுதுவோர் தமக்கும் அவருக்கும் உள்ள தொடர்பை தமது விருப்பு வாக்கியத்திலே பயன் படுத்தலாம்.

எ. கா:- தங்கள் அன்புள்ள தம்பி,
தங்கள் நன்றியை மறவாத,

இறுதியாக இவற்றின் கீழ் தங்கள் கையெழுத்தை இட்டுக கொள்ள வேண்டும். அடுத்து விலாசம். இது கடிதத்தின் கவர் மீது எழுதப் படும்.

இவ் வினாவிற்கு கடித உறுப்புகளை செம்மையாகவும் செய்திகளை நேர்த்தியாகவும் எழுதி இப்பகுதிக்குரிய புள்ளியை மாணவர்கள் சுலபமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

**சுருக்கம்;**

அதிக சுலபமானதும் ஆனால் மாணவர்கள் பலராலும் விரும்பப்படாதது மான இவ்வினா பகுதி இரண்டில் மூன்றாவது வினாவாகவும் இறுதி வினாவாகவும் அமைகிறது. விருப்பமின்றி இவ்வினாவினை எடுத்து இதன் புள்ளியில் பெருமளவினை மாணவர்கள் பெறத் தவறி விடுகின்றனர். இதனை எழுதும் முறை பற்றிச் சுருக்கமாகவே சில கருத்துக்களை நோக்குவோம்.

1. கொடுக்கப்பட்ட உரைப் பகுதியைப் பலமுறை படித்துக் கிரகித்துக் கொள்ள வேண்டும்.
2. பிரதான கருத்துக்களையும் துணைக்கருத்துக்களையும் குறித்துக் கொள்ள வேண்டும்.
3. தேவையற்ற விடயங்களை நீக்கிக் கொள்ள வேண்டும். (பழமொழிகள், எடுத்துக்காட்டுச் செய்யுள்கள், உவமைகள்
4. தரப்பட்ட உரை நடைப் பகுதி பலபந்திகளாக அமைந்தாலும் சுருக்கம் ஒரேபந்தியில் அமைய வேண்டும்.
5. தன்மை, முன்னிலையில் வரும் வாக்கியங்களை படர்க்கையாக மாற்றியே எழுத வேண்டும்.
6. தமது சொந்த நடையிலேயே மாணவர் சுருக்கத்தை எழுதுதல் வேண்டும்.
7. குறிக்கப்பட்ட (கேட்கப்பட்ட) அளவில் அமைய வேண்டும். (சற்று ஏற்றத்தாழ்வு ஏற்படலாம்)
8. உரைப்பகுதியில் உள்ளமையக் கருத்து சுருக்கத்திலும் பிரதிபலிக்க வேண்டும்,
9. திட்பமும் நுட்பமும் சுருக்கத்திற்கு அவசியம்.

இவ்வாறு அமையும் சுருக்கம் உங்களுக்கு அதற்குரிய புள்ளியைப் பெற்றுத்தரும்.

**பொ.கமலரூபன்**
கரவெட்டி

## விஞ்ஞானம்

21. ஓர் ஒலிச்சுரத்தில் சுருதி அதிகரிக்கப்படும் போது அதன்
    1. அலைநீளம் குறையும்
    2. வீச்சம் கூடும்
    3. மீடிறன் குறையும்
    4. வேகம் கூடும்
22. $N_2O_4 <-> 2NO_2\ \Delta H=+$
    மேலே கூறிய சமன்பாட்டின்படி சமநிலையில் உண்டாகும்நைதரசன் ஈரொட்சைட்டின். அளவை அதிகரிப்பதற்கு தேவையானது
    1. அமுக்கத்தை குறைத்து வெப்பநிலையை அதிகரித்தல்
    2. அமுக்கத்தை அதிகரித்து வெப்பநிலையைக் குறைத்தல்
    3. அமுக்கத்தையும் வெப்பநிலையையும் அதிகரித்தல்
    4. அமுக்கத்தையும் வெப்பநிலையையும் குறைத்தல்
23. ஒரு எளிய பொறியின் பொறிமுறை நயத்தை தருவது
    1. $\frac{\text{சுமை}}{\text{எத்தனம்}}$ 2. $\frac{\text{எத்தனம்}}{\text{சுமை}}$
    3. $\frac{\text{எத்தனம் அசைந்த தூரம்}}{\text{சுமை அசையும் தூரம்}}$
    4. $\frac{\text{சுமை அசையும் தூரம்}}{\text{எத்தனம் அசைந்த தூரம்}}$
24. பின்வரும் எந்த வழிமுறை 1m சல்பூரிக்கரைசலைத் தரும் (H-1 S=32, O-16)
    1. 1000 மிலீ நீரில் 49 கிராம் சல்பூரிக்கமிலம் கரைந்து காணப்படல்
    2. 1000 மிலீ நீரில் 98 கிராம் சல்பூரிக்கமிலம் கரைந்து காணப்படல்
    3. கரைச்லின் கனஅளவு 1000 மிலீ ஆகும்படி 49 கிராம் சல்பூரிக்கமிலம் நீரிற் கரைத்தல்
    4. கரைசலின் கனஅளவு 1000 மிலீ ஆகும்படி 98 கிராம் சல்பூரிக்கமிலம் நீரிற் கரைத்தல்
25. இயற்கைத் தேர்வு என்ற எண்ணக்கருவை முதன்முதலில் எடுத்துக் கூறியவர்
    1. லூயி பாச்சர் 2. ஐசாக் நியூட்டன்
    3. ஜோசப் பிறீற்ஸ்லி 4. சாள்ஸ் டாவின்

விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) 2 | 2) 4 | 3) 1 | 4) 3 | 5) 3 | 6) 2 |
| 7) 2 | 8) 2 | 9) 3 | 10) 4 | 11) 3 | 12) 3 |
| 13) 3 | 14) 1 | 15) 3 | 16) 4 | 17) 4 | 18) 3 |
| 19) 2 | 20) 3 | 21) 1 | 22) 1 | 23) 1 | 24) 4 |
| 25) 4 | | | | | |

## ௨ஆம் ஆண்டு நினைவலைகள்



தாயின் மடியில்
1965-11-27

தாயக மண்ணில்
1992-12-03

**வீரவேங்கை அமுதரசன்**
இராசரெத்தினம் கணேசலிங்கம் (கணேஸ்)
7-ம் வட்டாரம், புங்குடுதீவு

குடும்பத்து முதல் மைந்தா குணத்தின் குன்றே
இனத்தின் விடிவிற்காய் இன்னுயிரை நீத்தாயே
உன்னைப் பிரிந்தோம் உன்நினைவை மறப்போமா

## சில்லாலை வீடுகளில் தளபாடங்கள் திருட்டு

மக்கள் குடிபெயர்ந்துள்ள சில்லாலை மேற்கு - வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உள்ள வீடுகளில் இருந்து பொருட்கள்களவாடப்படுவதுதொடர் ... ஏற்றி வந்த உழவு இயந்திரத்தில் மறைத்து எடுத்து வரப்பட்டபோது யந்திர சில்லு காற்றுப்போய் நின்றதனால் திருட்டு அம்பலத்து ...

## படையினரை விசாரணைக்கு ஒப்படைக்க கோரிக்கை

(கொழும்பு)

தென்பகுதியிலுள்ள போவிலான என்னும் கிராமத்தில் கிராம வாசிகளை தாக்கியதாக கூறப்படும் ஐந்து இரா... றில் வந்த மேற்படி சிப்பாய்கள் மக்களை கண்டபடி தாக்கியதாக பொலிசாரிடம் புகாரிடப்பட்டுள்ளது. இச் சம்பவத்தில் ...

## பஸ்வண்டி ஆயுதமுனையில் கொள்ளை

(கொழும்பு)

அக்கரைப்பற்று நோக்கி வந்து கொண்டிருந்த பஸ் ஒன்று ஆயுதமுனையில் ...

சில்லாலை மேற்கு - வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உள்ள வீடுகளில் இருந்து பொருட்கள்களவாடப்படுவதுதொடர்வதாகத் தெரிவிக்கப்படுகிறது

சமீபத்தில் இவ்வாறு திருடப்பட்ட இரும்பு கேட்குழைத்தில் மறைத்து எடுத்து வரப்பட்டபோது யந்திர சில்லு காற்றுப்போய் நின்றதனால் திருட்டு அம்பலத்துக்கு வந்த சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது. (21)

(கொழும்பு)

தென்பகுதியிலுள்ள போவிலான என்னும் கிராமத்தில் கிராம வாசிகளை தாக்கியதாக கூறப்படும் ஐந்து இராணுவ சிப்பாய்களை விசாரணைக்காக ஒப்படைக்குமாறு பொலிஸ் திணைக்களம் இராணுவ தலைமைப் பீடத்தைக் கோரியுள்ளது.

குறிப்பிட்ட கிராமத்தில் கிராமவாசிகள் அணைக்கட்டு ஒன்றை அமைக்க முயன்றபோது இராணுவ ஜீப்பொன்றில் வந்த மேற்படி சிப்பாய்கள் மக்களை கண்டபடி தாக்கியதாக பொலிசாரிடம் புகாரிடப்பட்டுள்ளது. இச் சம்பவத்தில் கிராமவாசி ஒருவர் கடும் காயங்களுக்கு உள்ளானதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்தே தாக்குதலை நடத்திய இராணுவ சிப்பாய்களை விசாரணைக்காக ஒப்படைக்குமாறு பொலிசார் கேட்டுள்ளதாக தெரியவருகின்றது.

(கொழும்பு)

அக்கரைப்பற்று நோக்கி வந்து கொண்டிருந்த பஸ்ஸொன்று ஆயுத முனையில் கொள்ளையிடப்பட்டதுடன் சாரதியும் கத்திக்குத்துக்கு இலக்கானார்,

கொள்ளையர்களின் தாக்குதலுக்கிலக்கானவர்களில் சிவில் உடையில் பயணம் செய்த ஆறு படையினரும் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது,

7-ம் வட்டாரர், புங்குடுதீவு

குடும்பத்து முதல் மைந்தா குணத்தின் குன்றே
இனத்தின் விடிவிற்காய் இன்னுயிரை நீத்தாயே!
உன்னைப் பிரிந்தோம் உன்னினைவை மறப்போமா
ஆண்டுகள் இரண்டானாலும்
நாளுமுன்னை நினைக்கிறோம்.

648 கண்டி றோட்
அரியாலை

உன்பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.
(சி/10822)

---

# வினோத் அக்கடமி

180,1ஆம் குறுக்குத்தெரு
(வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை)
யாழ்ப்பாணம்.

கல்வி ஆண்டு 1995இற்கான
புதிய அனுமதிகள் கோரப்படுகின்றன.

ஆண்டு 4 முதல் O/L வரையான

சகல வகுப்புகளும்

**ஆரம்பம் - 05-12-1994**

பி. ப - 2.00 மணி

(10267)

---

# விப்ஜியோர் அக்கடமி

(குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை)

ஆண்டு 6 முதல் O/L வரை

புதிய பிரிவுகள் ஆரம்பம்
4 - 12 - 94

(ஞாயிறு காலை 9 மணி)

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | - | J. J. கொலின்ஸ் |
| கணிதம் | - | ஜெயக்குமார், அருள்ராஜ் |
| தமிழ் | - | தங்கவேல் |
| சமூ. வரலாறும் | - | கோபி |
| வர்த்தகம் | - | அற்புதராஜா |
| ஆங்கிலம் | - | ஜெயானந்தன், சேகர் |

(10256)

---

# அந்தியேட்டி அழைப்பு

41-ம் நாள



முருகர் நாகையா

31-ம் நாள்



நாகையா
சின்னாச்சிப்பிள்ளை

| | | | | |
|---|---|---|---|---|
| 4. 10. 1916 | -----> | மலர்வு | <----- | 5. 10. 1923 |
| 25. 10. 1994 | -----> | உதிர்வு | <----- | 3. 11. 1994 |

எங்கள் நெஞ்சமெல்லாம் வியாபித்திருக்கும்அமரர்கள் முருகர் நாகையா, நா. சின்னாச்சிப்பிள்ளை இருவரதும் அந்தியேட்டிக் கிரியை 3. 12. 94 இன்று அன்னாரது இல்லத்திலும், அன்னாரின் நினைவாக முருகமூர்த்தி ஆலயத்தில் நடைபெறும். அபிஷேக அன்னதான வைபவத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவர்களது மரணச் செய்திகேட்டு எம் துயரத்தில் பங்கு கொண்டும் பல வழிகளிலும் எமக்கு உதவிய அனைவருக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இத்தாவில், பளை

குடும்பத்தினர்
(10246)

---

# 45-ம் நாள் நன்றி நவிலல்

03-12-1994

தோற்றம்
11-02-1946

மறைவு
20-10-1994



## திருமதி தேவமலர் மரியதாஸ்

ஆருயிர் மனைவியாய், பாசமுள்ள அம்மாவாய், ஆசை மாமியாய், நேசமுள்ள சகோதரியாய்,குடும்பத்தின் வழிகாட்டியாய் திகழ்ந்து எம்மையெல்லாம் அன்போடு அரவணைத்த அன்புத்தெய்வம் எமைப் பிரிந்து 45-ம் நாளான இன்று அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

அதேவேளையில் மரணச்சடங்கிலும் அதனைத் தொடர்ந்து 31-ம் நாள் (19-11-1994) சிலுவை நாட்டு வைபவத்திலும் கலந்து கொண்டு எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் அஞ்சலிகளை கடித மூலமும், அச்சேற்றி வெளியிட்ட பொது ஸ்தாபனத்தாருக்கும் வெளிநாடுகளில் வசிக்கும் உற்றார் உறவினருக்கு மரணச்செய்திதனை உரிய நேரத்தில் அனுப்பியவர்களுக்கும் எமது நன்றிதனை தெரிவித்துக் கொள்கின்றோம்.

வேளாங்கண்ணி,
கற்கோவளம்.

அவரின் பிரிவால் வாடும்
கணவன்,பிள்ளைகள்,மருமக்கள்,
சகோதர, சகோதரிகள், மைத்துனர்,
மைத்துனிமார், சிறியதாய், தந்தையார்
பேரன்.

(10252)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

சிந்தனைக்கு

ஒரு கணத்தில் அழிக்கக்கூடியது ——
மீண்டும் உருவாக ஒரு யுகமே தேவை

-வில்லியம் காங்ரீவ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 03-12-94
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

## ஆரம்பத்திலிருந்தல்ல


விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் இனப்பிரச்சினைக்கான சமாதானப் பேச்சுவார்த்தைகள், ஆண்டிறுதிக்குள் முன்பாக ஆரம்பமாகும் என சிறிலங்கா அரசதரப்பு உறுதிசெய்துள்ளது. கடந்த புதன்கிழமை பத்திரிகையாளர் மாநாட்டில் பேசிய தகவல்துறை அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான தர்மசிறி சேனநாயக்கா அரசாங்கத்தின் இந்நிலைப்பாட்டை வெளியிட்டார்.

அத்தோடு,'' இனப்பிரச்சினைக்கான சமாதானத் தீர்வை எய்துவதென்பது விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் நடத்தும் பேச்சுக்களினாலேயே அர்த்தம் உடையதாக இருக்கும்'' என ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் அப் பத்திரிகையாளர் மாநாட்டில் குறிப்பிட்டிருந்தார்.

அமைச்சர் வெளிப்படுத்தியுள்ள பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கான கால எல்லையும், ஜனாதிபதி சந்திரிகா வெளிப்படுத்தியுள்ள புலிகளுடனேயே பேசவேண்டும் என்ற யதார்த்தமான முடிவும் இனப்பிரச்சினை தீர்விற்கான பேச்சுவார்த்தைகள் பெரும்பாலும் இவ்வருட இறுதிக்குள் ஆரம்பிக்கலாம் என்ற அமைச்சரின் பேச்சில் நம்பிக்கையைக் கொடுப்பதாகவே இருக்கின்றது.

இந்த நிலையில் முதலாம்கட்ட பேச்சுவார்த்தை குறித்தும், அதன் பின்னர் நடைபெற்ற சம்பவங்கள் குறித்தும் அரசாங்கம் கவனத்திற் கொள்ளவேண்டிய பல விடயங்கள் உள்ளன. அவை புறக்கணிக்கப்படும் பட்சத்தில் முதலாம் கட்டப் பேச்சுக்களின் முன்பும், பின்பும் நடந்தது போன்ற சம்பவங்களும், இரண்டாம் கட்டப் பேச்சுக்களைத் தொடரப் பெரும் பிரயத்தனமும் எடுக்க வேண்டி வந்தது போன்ற இடையூறுகளுமே எதிர்காலத்திலும் இடம்பெறலாம்.

ஆகையினால், அரசாங்கம் சமாதான முயற்சிகளுக்கு ஊக்கமளிக்கக்கூடிய விடயங்களில் அக்கறை காட்ட வேண்டும். கடந்த முறை அரசாங்கம் இவ்விடயத்தில் எடுத்த முடிவால் பயன் ஏதும் ஏற்படவில்லை. சமாதான முயற்சிகளை தொடங்குமுன் தடைசெய்யப்பட்ட பொருள்களின் ஒருபகுதி மீதான தடையை அரசாங்கம் நீக்கியதாக அறிவித்தது. ஆனால், அவை முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை. இராணுவம் கடந்தகாலத்தைப் போன்றே தனது கெடுபிடிகளைத் தொடர்ந்தது.



தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய நிதியம் அண்மையில் ஆரம்பித்த மாவீரர் சோலை சேமிப்புத்திட்ட அங்குரார்ப்பண நிகழ்வில் யாழ். மாவட்ட சிறப்புத் தளபதி திரு. வ. செல்வராசா, சிறுவர் ஒருவருக்குச் சேமிப்புப் பத்திரத்தை கையளித்தபோது எடுக்கப்பட்ட படம்.

## குழந்தை இறப்பு வீதம் சாவகச்சேரியில் அதிகம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் செப்டம்பர் மாதம் வரையான ஒன்பது மாதகாலப் பகுதியில் நோய்களினால் மரணமடைந்த குழந்தைகளின் சதவீதம் - சாவகச்சேரி சுகாதார அதிகாரி பிரிவிலேயே உச்சமாக காணப்படுவதாக - யாழ் மாவட்ட சுகாதார அத்தியட்சகர் பிரிவு வெளியிட்டுள்ள புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

மொத்தமாக மாவட்டத்தில் மரணமடைந்த குழந்தைகளின் எண்ணிக்கையுடன் ஒவ்வொரு சுகாதார அதிகாரி பிரிவும் ஒப்பிடப்பட்டு பெறப்பட்ட புள்ளி விபரங்களே இத் தகவல்களை தந்துள்ளன.

இதன்படி, சாவகச்சேரி பிரிவில் 22 சதவீதமாகவும்' கோப்பாய் பிரிவில் 19 சதவீதமாகவும், மானிப்பாய் பிரிவில் 18 சதவீதமாகவும், பருத்தித்துறை பிரிவில்16, சதவீதமாகவும், யாழ்ப்பாணப் பிரிவில் 14 சதவீதமாகவும், தெல்லிப்பழை பிரிவில் 11 சதவீதமாகவும் குழந்தைகள் மரணவீதம் காணப்படுகின்றது.

## கைதிகளை கொண்டு செல்ல சிறைக்காவலர்கள் மறுப்பு

### சிறை அதிகாரி தாக்கப்பட்டதன் விளைவு

கொழும்பில் நேற்று முன்தினம் காலையில் நீதிமன்ற நடவடிக்கைகள் பெரும் பாதிப்புக்களுக்கு இலக்காகின. சிறைச்சாலை அதிகாரி ஒருவர் பாதுகாப்பு ஊழியர் ஒருவரைத் தாக்கினார் என்பதை ஆட்சேபித்து சிறைக் காவலர்கள் மேற்கொண்ட நடவடிக்கையின் காரணமாகவே இப் பாதிப்பு இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. பாதுகாப்பு ஊழியர் மீது தாக்குதல் நடத்திய சிறைச்சாலை அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப்படும் வரை சிறையில் இருக்கும் கைதிகளை நீதி மன்றங்களுக்கு அழைத்து வருவதற்கு சிறைக்காவலர்கள் மறுப்பு தெரிவித்துள்ளனர்.

எதிரிகள் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்படாததை அடுத்து வழக்குகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. இதே வேளை சிறைச்சாலை திணைக்களப் பேச்சாளர் ஒருவர் தகவல் தருகையில் சிறைச்சாலை அதிகாரி தற்காலிகமாக பதவிநீக்கம் செய்யப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

## 2025 ஆம் ஆண்டளவில்

யாழ். வைத்தியசாலை

## தாதிய உத்தியோகத்தர் கொடுப்பனவில் தாமதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனை தாதியர் உத்தியோகஸ்தர்களுக்கு மூன்று மாதமாக கொடுக்கப்படாதிருந்த மேலதிக கொடுப்பனவில் ஒரு மாதத்திற்குரிய கொடுப்பனவு மட்டும் நேற்று வழங்கப்பட்டுள்ளதாக தாதிய உத்தியோகஸ்தர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி தாதிய உத்தியோகஸ்தர்கள் தெரிவிக்கையில்: மாதா மாதம் வழங்கப்படவேண்டிய மேலதிக வேலைநேரக் கொடுப்பனவு இரண்டு மூன்று மாதங்கள் கழிந்த பின்னரே ஒரு மாதத்திற்கான கொடுப்பனவு வழங்கப்படுவது வழமையாகி விட்டது.

இக்கொடுப்பனவு காலம் தாழ்த்தி வழங்கப்படுவது குறித்து நிர்வாகத்திடம் கேட்டபோது. மருத்துவமனைக்கான நிதி ஒதுக்கீடு போதாமையை காரணம் காட்டுவதாக அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

வாழ்க்கைச் செலவு பெருமளவு கூடியுள்ள தற்போதைய சூழ்நிலையில் தமக்கான கொடுப்பனவுகள் இவ்வாறு பல மாதங்கள் தாமதமடைவதால் தாம் பெரும் இக்கட்டான நிலை ஏற்படுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (சி)

## கூட்டம்

இன்று காலை 10, 00மணிக்கு யாழ்இந்து மகளிர்கல்லூரியில் நடைபெறவிருக்கும் கூட்டத்திற்கு வலயம் ஒன்றைச் சேர்ந்த இணைப்பு நிலைய உத்தியோகத்தர்கள், உதவி இணைப்பு நிலைய உத்தியோகத்தர்கள், பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்கள் நிரந்தர நோக்குனர்கள் சகலரையும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென்று வலயம் ஒன்றின் கல்விப்.பணிப்பாளர் கேட்டுக்கொள்கின்றார்

பாலத்துறை குண்டுவெடிப்பில்

## எஞ்சியிருந்த சடலம் ஹட்டன் வாசியுடையதாம்

(கொழும்பு)

பாலத்துறை குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டவர்களில் இதுவரை அடையாளம் காணப்படாத நிலையில் இருந்துவந்த சடலம் ஒரு தமிழருடையது என இப்போது தெரியவந்துள்ளது.

மேற்படி நபர் ஹட்டனைச் சேர்ந்த மாரிமுத்து எனவும் கொழும்பில் கூலிவேலை செய்து வந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பில் 4 லட். பேர் மழையினால் வீடிழப்பு

கிழக்கில் தொடர்ந்து பெய்து வரும் மழையினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் 4 இலட்சம்பேர் வீடுகளை இழந்திருப்பதாக செய்தி ஏஜென்சி ஒன்று தெரிவித்துள்ளது.

கடந்த 31ஆண்டுகளில் இவ்வாண்டே மிகக் கனத்த மழை பெய்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய பதிவுக்கு நிவாரணம் இடைநிறுத்தப் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

கிராம சேவை அலுவலர் மட்டத்தில் 'புதிதாக பதிவுகளை மேற்கொண்ட மீனவர்களுக்கான நிவாரணத்தை இடை நிறுத்துமாறு யாழ் செயலக திட்டப்பணிப்பாளர் சகல பிரதேச செயலர் பிரிவுகளுக்கும் சுற்றறிக்கை மூலம் கேட்டுள்ளார்.

கடந்த வருடம் மீனவர் நிவாரணம் பெற்றவர்களின் பட்டியலுக்கே நிவாரணத்திற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் புதிதாக எவருக்கும் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.(05

## பெருமளவு மழையினால்

முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை. இராணுவம் கடந்தகாலத்தைப் போன்றே தனது கெடுபிடிகளைத் தொடர்ந்தது.

மறுவளமாக, சமாதான சூழ்நிலையைக் குழப்பும் நடவடிக்கைகளையே இராணுவத்தரப்பினர் மேற்கொண்டனர். அப்பாவிப் பொதுமக்கள் மீதும், விடுதலைப்புலிகள் மீதும் திட்டமிட்ட தாக்குதலை நடாத்தினர். இதனைத் தொடர்ந்து விடுதலைப்புலிகளும் சிறிலங்கா ஆயுதப் படையினர் மீதும் தாக்குதலை நடாத்தவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகினர்.

சிறிலங்கா இராணுவத்தைப் பொறுத்து யுத்தநிறுத்தம் அறிவிக்கப்படவில்லை என்பது ஒரு சாட்டாக இருந்தது. ஆனால்உண்மையில்இராணுவம் பேச்சுவார்த்தையையோ யுத்தநிறுத்தத்தையோ மனதளவில்விரும்பவில்லை என்பதே உண்மையாகும். இதற்குச் சிறப்பான எடுத்துக்காட்டாக அமைந்தநுதான் லெப். கேணல் மல்லியின் கொலையும், அவர் தலை துண்டிக்கப்பட்டதும் ஆகும்.

ஜனாதிபதியாக சந்திரிகா குமாரதுங்கா பதவி ஏற்றதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு வாரகால போர் இடைநிறுத்தத்தை அறிவித்திருந்த வேளையில், இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது. இச்சம்பவத்தில் இராணுவம் நடந்துகொண்ட முறையானது ஆத்திரத்தை விளைவிக்கக்கூடியதாகும். அதாவது விடுதலைப் புலிகளுக்கு "ஆத்திரத்தை ஏற்படுத்தி யுத்த இடைநிறுத்தத்தை மீறுமாறு செய்வதற்கென திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டதொன்றென்பதில் சந்தேகமில்லை.

இந்தவகையில் சந்திரிகா அரசாங்கம் முதலாம் கட்டப் பேச்சுவார்த்தைக்கு முன் செய்ததாகக் கூறிக்கொண்டவை, பேச்சுவார்த்தையின்போது கருத்திற்கொள்ளப்பட்ட விடயங்கள் எவையும் அர்த்தமற்றவையாகவும் பயனற்றவையாகவும் போய்விட்டன. முதலாம் கட்டப் பேச்சுவார்த்தையின் பின் வந்த காலம் சமாதானப்பேச்சுக்கள் குறித்துக் கேள்வியை எழுப்பியவையாக இருந்தனவே ஒழிய அது குறித்து நம்பிக்கையைக் கொடுப்பவையாக இருக்கவில்லை.

இந்தவகையில் அடுத்த கட்டப் பேச்சுக்கள்குறித்துப் பேசப்படும் நிலையில், முன்னைய நிலைமை உருவாகாது, அதாவது மீண்டும் மீண்டும் ஆரம்பத்தில் இருந்தே தொடங்கவேண்டும், நம்பிக்கைகள் உருவாக்கப்பட வேண்டும் என்பது போன்ற நிலை உருவாகாமல் முன்னேற்பாடுகளைச் செய்வது அவசியமாகும். ஆகையினால் இதற்கு ஏற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையுடனும் உறுதியுடனும் அரசாங்கம் பேச்சுக்களை ஆரம்பிப்பதே சிறந்ததாகும்.

டிக்கையின் காரணமாகவே மறுப்பு தெரிவித்துள்ளனர்.

# 2025 ஆம் ஆண்டளவில் ஆசியாவில் எயிட்ஸ் தீவிரமாகும்

## உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிப்பு

(கொழும்பு)

2025-ம் ஆண்டளவில் உலகின் ஏனைய பிரதேசங்களிலும் பார்க்க ஆசியா முழுவதும் எயிட்ஸ் நோய் பயங்கரமான முறையில் பரவக்கூடும் என உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த நோய் ஆரம்பத்தில் வேகமாகப் பரவிய ஆபிரிக்க நாடுகளில் அதன் வேகம் குறைந்திருக்கிறது. அமெரிக்காவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் கூட இந்த நோயினால் புதிதாக பீடிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவிக்கின்றது.

எயிட்ஸ் நோய்க் கிருமியான எச். ஐ. வி. வைரஸ் தொற்றியவர்களின் எண்ணிக்கை உலகம் முழுவதும் ஒருகோடி 60 இலட்சத்துக்கும் அதிகமானோர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்னும் 4 வருடங்களில் இத்தொகை 4 கோடியாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையில் இந்நோய் தொற்றியவர்களின் எண்ணிக்கை ஏழாயிரமாகவும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழீழ மாவட்ட நீதிமன்று கனகராயன்குளத்தில்

(யாழ்ப்பாணம்)

வவுனியா பிரதேசத்துக்கான மாவட்ட நீதிமன்றின் ஆரம்ப வைபவம் எதிர்வரும் திங்களன்று காலை பத்து மணியளவில் கனகராயன் குளத்தில் இடம்பெறவுள்ளது.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் நீதி நிர்வாகத்துறையினர் அறிவித்துள்ளனர்.

# கடல் பயணத்தின்போது கிராம சேவகர் மரணம்

கிளாலிக் கடலில் படகில் பயணம் செய்து கொண்டிருந்த கிராமசேவகர் திடீர் மரணமானார்.

வண்ணார்பண்ணைவடமேற்கு பிரிவில் கடமையாற்றும் கந்தசாமி என்பவரேமரணமானவராவார். கடந்த 29 ஆம் திகதி கிளாலிஊடா கப்படகில் பயணம் செய்து கொண்டிருந்த வேளை மாரடைப்பினால் மரணமானதாக தெரிவிக்கப்படுகிறது.

(இ),(தி)

# நிர்வாக சேவை பயிற்சி ஜனவரியில் ஆரம்பிக்கும்

இலங்கை நிர்வாக சேவையின் சான்றிதழ் பயிற்சி நெறியின் ஆங்கில மொழி மூலமான பயிற்சி தை மாதம் 2-ம் திகதி தொடங்கி ஒரு மாதத்திற்கு நடைபெறும் எனவும் இப்பயிற்சி மூன்று மாதங்களுக்கு தொடர்ந்து நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இது பற்றி பயிற்சியாளர்களுக்கு உரிய நேரத்தில் அறிவிக்கப்படுமெனவும் தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது. (இ)

## வேரவில்லில் பனை நடுகை

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதியினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் கற்பகச் சோலை பனை நடுகைத் திட்டத்தின் அடிப்படையில் வேரவில் பகுதியில் பனை விதைகள் அண்மையில் நாட்டப்பட்டன. வேரவில் இந்து தமிழ் கலவன் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பொது மக்கள் ஆகியோரால் ஒன்றிணைந்து மேற்கொள்ளப்பட்ட இம் முயற்சி மன்னார் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதியின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

களுக்கும் சுற்றறிக்கை மூலம் வும் தெரிவிக்கப்படுகிறது. (05

# பெருமளவு மழையினால் நெற்காணிகளுக்கு பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தென் மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நவாலி, மானிப்பாய் ஆனைக்கோட்டை பிரதேசங்களில் கூடியளவு மழை வீழ்ச்சியால் பெருமளவு நெற்காணிகள் நீரில் மூழ்கி அழிந்துள்ளதாக விவசாய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அழிவுக்குட்பட்ட விவசாயிகள் தமது அழிவு தொடர்பான விபரங்களை சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளில் முறைப்பாடு செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடந்த வருடம் பெரு மழைவீழ்ச்சியால் பாதிக்கப்பட்ட விவசாயத் தரப்பினருக்கு எவ்வித நிவாரணமும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது

(05)

## விண்ணப்ப முடிவுத் திகதி மேலும் நீடிப்பு

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் நெல் பயிரிடும் விவசாயிகளிடையே மழையை நம்பிய நெற்செய்கையிலும், நீர்ப்பாய்ச்சுகை நெற்செய்கையிலும் தனித்தனியே வடதமிழீழத்திலுள்ள சகல மாவட்டத்திலும் வேளாண்மன்னர் தெரிவுப் போட்டி நடாத்தப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே.

இப்போட்டிக்கு டிசம்பர் மாதம் 15ம் திகதிவரை விண்ணப்பிக்கலாம் என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செய்திக் குறிப்பொன்றின் மூலம் தெரிவித்து உள்ளது.

மழை காரணமாக விதைப்பு தாமதமடைவதனாலேயே இந் நீடிப்பு வழங்கப்படுவதாக மேலும் அச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்பு நவம்பர் 30-ம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்குமாறு கேட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994.12.03 சனி இரவு

08.01 - அறிவியற்கலசம்
08.10 - நிகழ்வும் பகிர்வும்
08.25 - நேயர்கடிதங்கள்
08.30 - செய்திகள்
08.40 - சித்திரம்-சந்திரா தனபாலசிங்கம் எழுதிய ''பனை வளர்ப்போம் பயன் பெறுவோம்''
09.00 மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

### 1994-12-04 ஞாயிறு காலை

07.02 - மாவீரவணக்கம்
07.15 - களத்தில் மலர்ந்தவை
07.30 - செய்திகள்
07.35-பத்திரிகைச் செய்திகள்
07.40-களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
08.00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

# யாழ். பல்கலை மாணவர் வெற்றிடம் மானியக் குழுவால் நிரப்பப்பட்டது

(யாழ்ப்பாணம்)

1993/94 கல்வியாண்டில் வெற்றிடமாகவுள்ள இடங்களை நிரப்புவதற்கான பெயர்ப்பட்டியலை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு யாழ். பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிவைத்துள்ளது.

இவ் அனுமதிக் கடிதங்கள் கிடைக்கப்பெற்ற மாணவர்கள் யாழ்ப்பாண பல்கலைக் கழக தேர்வுகளும், அனுமதிகளும் கிளையில் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

இதன்படி கலைத்துறையில் 6 மாணவர்களும், முகாமைத்துவ துறையில் 5 மாணவர்களும், வர்த்தகத்துறையில் 11 மாணவர்களும், உயிரியல் விஞ்ஞான துறையில் 15 மாணவர்களும், பௌதிக விஞ்ஞான துறையில் 47 மாணவர்களும் புதிதாக சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## உணவில் நச்சுத் தன்மை; 150 தொழிலாளர் பாதிப்பு

[கொழும்பு]

பிலியந்தலை பகுதியிலுள்ள தனியார் தொழிற்சாலை ஒன்றின் நிர்வாகத்தினரால் வழங்கப்பட்ட உணவை உட்கொண்ட 150 தொழிலாளர்கள் திடீரென நோய்வாய்ப்பட்ட நிலையில் வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. நஞ்சுத் தன்மையுடைய உணவை உட்கொண்டமையாலேயே இவ்வாறு தொழிலாளர்கள் நோய்வாய்ப்பட நேர்ந்ததாக வைத்திய அறிக்கைகள் தெரிவித்துள்ளன.

## தென்மராட்சி கோட்ட புலமைப் பரிசில் முடிவு

(தென்மராட்சி)

யாழ். மாவட்டத்தில் நேற்று முன்தினம் வெளியான ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் வரிசையில் தென்மராட்சி கோட்டப் பாடசாலை ரீதியாக சித்தியடைந்தோர் தொகை வருமாறு:

- சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை 10 பேர்.
- நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாசாலை 10 பேர்.
- கல்வயல் சிறீ சண்முகானந்தா வித்தியாசாலை 07 பேர்
- மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம் 03 பேர்.
- மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் 05 பேர்.
- நாவற்குழி மகா வித்தியாலயம் 02 பேர்.
- சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயம் 02 பேர்.
- கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் 02 பேர்.
- அல்லாரை அ.த.க. பாடசாலை 02 பேர்.
- எழுதுமட்டுவாள் கணேசா வித்தியாசாலை 02 பேர்.
- மட்டுவில் வடக்கு சந்திரமௌலீசா வித்தியாலயம் 02 பேர்.
- சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி 01 பேர்.
- உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் 01 பேர்
- மட்டுவில் மகா வித்தியாலயம் 01 பேர்.
- வரணி மகா வித்தியாலயம் 01 பேர்.
- மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம் 01பேர்.
- எழுதுமட்டுவாள் அ.த.க. பாடசாலை 01 பேர்.

### கலைவிழா

அன்பு பாலர் பாடசாலையின் கலைவிழா நாளை பிற்பகல் 2 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ்வைபவத்துக்கு பிரதம விருந்தினராக யாழ். மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் கலந்து கொள்வார்.

## பளை மத்திய கல்லூரிக்கு பரீட்சை முடிவு கிட்டவில்லை

(தென்மராட்சி)

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற ஆண்டு ஐந்து மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் கிளி / பளை மத்திய கல்லூரிக்கு கிடைக்கவில்லை.

கிளிநொச்சியில் இருந்து கிளாலியூடாக இப்பெறுபேறுகளை எடுத்து வர உத்தியோகஸ்தர்கள் சென்றுள்ளதாகவும் எதிர்வரும்திங்கட்கிழமை பெறுபேறுகள் கிடைக்கக் கூடியதாக இருக்கும் என கல்விக் கோட்ட வட்டாரம் தெரிவிக்கின்றது. (86)

## ஏமாற்றுப்பேர்வழி ஒருவன் இரு வீட்டில் மோசடி

(யாழ்ப்பாணம்)

ஒரே ஊரில் இரு வீட்டார் ஏமாற்றுப்பேர்வழி ஒருவரின் வார்த்தைக்கு மயங்கி பணத்தைக் கொடுத்து ஏமாந்தனர்.

நேற்று முன்தினம் காலை தச்சன்தோப்பு பகுதிக்கு வந்த முகம் அறியாத ஒருவர் தனது மகன் ஒருவர் வெளிநாட்டில் இருப்பதாகவும் மகனின் கீழ்தான் உங்கள் மகன் பணிபுரிவதாகவும் கூறி கொழும்பில் அவர்களிடம் தொலைபேசியில் தாம் கதைத்ததாகவும் கூறி தமக்கு அவசரமாகத் தேவைப்படும் பணத்தைபெற்றுச்சென்றுள்ளார்.

இரு வீட்டுக்காரர்களையும் தனித் தனியாகச் சந்தித்த அந்த ஆசாமி மகன்மார் வெளிநாட்டில் உள்ள இடம், பெயர் போன்ற விபரங்களை

தென்னிந்திய திருச்சபை யாழ். அத்தியட்சாதீனம்
கீழைத்தேய, மேலைத்தேய இசைக்குழுவினர்
வழங்கும்
கிறிஸ்து பிறப்பு இசை வழிபாடு

### சமுகம்தரவும்

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுனர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின்எழுதுவினைஞர் பயிற்சியை பூர்த்திசெய்த சகல பயிலுனர்களையும் நாளை காலை 9 மணிக்கு கண்டி வீதியிலுள்ள இலங்கை செஞ்சிலுவை சங்க யாழ் கிளைக்கு சமுகம் தருமாறு - வடக்கு - கிழக்கு மாகாண பயிற்சி முகாமையாளர் ம. சிவயோகசுந்தரம் கேட்டுள்ளார்.

### பரிசளிப்பு விழா

(தொல்புரம்)

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவும், தாபகர் தினமும் கடந்த புதன்கிழமை அன்று வித்தியாலய மண்டபத்தில் அதிபர் திரு.கா.நடராசா தலைமையில் வெகுசிறப்பாக நடைபெற்றது.

## போக் உடைந்து பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

சின்னக்கடை வீதியில் துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்தபோது போக் உடைந்து வீழ்ந்ததில் பெண் காயமடைந்தார்.

மேற்படி விபத்தில் துவிச்சக்கர வண்டியை செலுத்தி வந்தவர் காயமெதுவுமின்றி தப்பியுள்ளார். பாரில்இருந்தவரான சாரதா என்னும் பெண்ணே காயமடைந்தவராவார். (சி)

### வீரச்சாவு

இன்று காலை 9 மணிக்கு இம் மாவீரனின் வித்துடல் இவரது இல்லத்திலிருந்து அணிவகுப்பு மரியாதைகளுடன் எடுத்துச்செல்லப்பட்டு நாவற்குழி லவனிதா குடியிருப்பு அமெரிக்கன் தமிழ் கலவன் பாடசாலையில் மக்களின் இறுதி வீரவணக்கத்திற்காக வைக்கப்பட்டு இறுதி வீரவணக்கக் கூட்டமும் நிறைவுற்றதும் அங்கிருந்து மீண்டும் அணிவகுப்பு மரியாதைகளுடன் எடுத்துச்செல்லப்பட்டு இறுதி இராணுவ மரியாதைகளுடன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதை குழியில் விதைக்கப்படும்.

### புலிகள்

அத்துடன் இலங்கை அரசின் திட்டங்கள் பற்றி இந்திய அரசிடம் விரிவாக விளக்கப்படும் எனவும் தெரிவித்தார். மேலும் பாகிஸ்தான்

# கணனிப் பயிற்சிக்கு 500 பேர் வட-கிழக்கில் தெரிவாவர்

[யாழ்ப்பாணம்]

வடகிழக்கில் கணனி பயிற்சிக்கென ஐந்நூறுபேர் தேசிய தொழில் பயிலுனர் சபையினால் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இலங்கை பூராகவும்கணனி தொடர்பான அறிவை வளர்க்கும் நோக்கோடு இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச ரீதியாக கணனி பாவனை அதிகரித்துள்ளதை தொடர்ந்து இலங்கையிலும் அதன் பாவனை அதிகரித்து வருகிறது. இதனால் அரசாங்கம் இப் பயிற்சி நெறியை இலங்கை பூராகவும் அந்தந்த மாவட்டத்தில் ஆரம்பிக்கவுள்ளது.

இதற்காக தேசிய பயிலுனர் சபையானது மாவட்டத்தில் உள்ள சனத்தொகையின் அடிப்படையில் மாணவர்களிற்கு இட ஒதுக்கீடு செய்யவுள்ளது.

இதன் அடிப்படையில் வடகிழக்கு பகுதிக்கென 500 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. என தேசிய தொழில் பயிலுனர்சபையின்கொழும்பு அலுவலக தகவல்கள் தெரிவிக்கின்றன. [இ, நி, பா]

## பண்டித வகுப்புகள்

தெல்லிப்பழை சண்டிலிப்பாய் கோட்ட கல்வி அலுவலகங்களின் சார்பில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் பிரவேச, பாலபண்டித, பண்டித வகுப்புகள் எதிர்வரும் 9-ம் திகதி மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும்.

## கால அவகாசம் நீடிப்பு

அரசியல் ரீதியாக பழிவாங்கப்பட்ட ஊழியர்களிடமிருந்து முறைப்பாட்டு விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வதற்கான கால அவகாசம் இம்மாதம் 15ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் பின்னரும் 1980 ஆம் ஆண்டு பொது வேலை நிறுத்தத்தின் பின்னரும் ஏராளமான ஊழியர்கள் பழிவாங்கப்பட்டனர். இவர்கள் நிவாரணம் கோரும் விண்ணப்பங்களை அந்தந்த அமைச்சுக்களின் செயலாளர்களிடம் சமர்ப்பித்தல் .வேண்டும் பிரதிஅமைச்சர்கள் தலைமையிலான குழுக்களின் மூலம் இவர்களின் மனுக்கள் விசாரிக்கப்பட இருக்கின்றன.

### இரண்டு

களின் உற்பத்தி நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டுள்ளது என தெரியவருகின்றது. [இ, பா, நி]

### மர்மமான

இவ் வியாபாரியின் மர்ம மரணம் குறித்து தமிழீழ காவல்துறையினர் தற்போது தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (27)

### புலிகளின்

சில யுத்தப் பிரதேசங்களில் விடுதலைப் புலிகளின் ஊடுருவல்களை தடுக்க பன்னிரண்டு

## பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

இளவாலையைச் சேர்ந்த தங்கமுத்து சிவசிதம்பரம்என்பவரது தேசிய அடையாள அட்டை வீதியில் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதை உரியவர் எமது பணிமனையில் பெற்றுக் கொள்ளவும். (இ)

# மரண அறிவித்தல்கள்

## மாணிக்கம் தியாகராஜா

ஆனைக்கோட்டை ஆறுகால்மடத்தை. பிறப்பிடமாகவும் தாவடியை வாழ்விடமாகவும் கொண்ட மாணிக்கம் தியாகராஜா காலமானார். இவர் சிவபாக்கியத்தின் [சொர்ணம்மா] அன்புக் கணவரும், நவரத்தினராஜா, ராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் மாணிக்கராஜா [பிறேசில்], சாரதா [கனடா], ஜெகதா [சுவிஸ்லாந்து], வனிதா, ஆனந்தராஜா [பொறியியலாளர்கொழும்பு), காலம்சென்ற மன்மதராஜா (அன்ரன் மாவீரர்), மதிமுகராஜா [கனடா], அனுசுயா, றொசாணி, [வைஷ்ணவி] ஆகியோரின் அன்புத்தந்தையும், பற்றிரா, சிறிகுமாரன், செல்வம் ஆகியோரின் அன்பு மாமனாரும், தணிகாசலம், வேலையா, முத்துலிங்கம், கமலா ஆகியோரின் மைத்துனரும், மன்மதராஜா [பிறேசில்] வனிதா [பிறேசில்], மார்வின் [சுவிஸ்லாந்து], சிவானி [கனடா] ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 3-12-1994 இன்று முற்பகல் 11 மணியளவில் யாழ் கோம்பையன் மணல் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சிவபாக்கியம் (சொர்ணம்மா)
(மனைவி).

அன்ரன் ஒழுங்கை,
தாவடி தெற்கு,
கொக்குவில்.

[சி-10823]

## செல்வி றோகினி சிவசுப்பிரமணியம்

மீசாலை கிழக்கைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் இராசம்மா தம்பதியரின் செல்வப் புதல்வி செல்வி றோகினி காலமானார். இவர் வி. யசோதா (சுவிஸ்) த. கிரிஜா ( ஆசிரியை யா - உயரப்புலம் மெ.மி. த.க. வித்தியாலயம் ஆனைக்கோட்டை) பி, புவிதா (சுவிஸ்) சி. மாலதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் விஜயரட்ணம் இ. தயாபரன், வே. பிரபாகரன் ஆகியோரின்

வழங்கும்

## கிறிஸ்து பிறப்பு இசை வழிபாடு
## CHRISTMAS CAROLS

காலம்: 04-12-1994 ஞாயிறு மாலை 3.30 மணிக்கு

இடம்: மேபல் தம்பையா மண்டபம், வேம்படி
மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

**அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றீர்கள்**

ஆதீனக் காரியாலயம்,
வட்டுக்கோட்டை,

திரு. ஜி. இராஜநாயகம்
அமைப்பாளர்

(சி-10759)


## இப்பொழுதுகாண்பிக்கப்படுகின்றது

யாழ். **ஸ்ரீதர்** அகலத்திரையில்

**தினசரி பிற்பகல்: 2. 30, 4. 30, 6. 30.**
**சனி, ஞாயிறு காலை 10.30, பி.ப. 2.30,4.30, 6.30**

விடுதலைப் புலிகளின்
கலை பண்பாட்டுக் கழகமும்
நிதர்சனமும் இணைந்து
திரைப்படப் பிரிவின் தயாரிப்பில்
உருவாகிய
ந. கேசவராஜனின்

# "பிஞ்சு மனம்"

(வர்ண முழு நீள படம்)

திரைப்பட பிரியர்களுக்கு மற்றுமோர் அரிய திரை விருந்து 'பிஞ்சு மனம்'!
தமிழீழ திரைவானில் உலாவி வருகின்றது 'பிஞ்சு மனம்'!
தமிழீழ மக்கள் பார்த்து மகிழ 'பிஞ்சு மனம்'!

(சி-10814)



இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 03.ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


இரு வீட்டுக்காரர்களையும் தனித் தனியாகச் சந்தித்த அந்த ஆசாமி மகன்மார் வெளிநாட்டில் உள்ள இடம், பெயர் போன்ற விபரங்களை சரியாகக் கூறியுள்ளார்.

ஒரு வீட்டுக்காரரின் மகன் பிரான்ஸிலும், இன்னொரு வீட்டுக்காரரின் மகன் சவூதி அரேபியாவிலும் பணிபுரிகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மிகத் தாமதமாகவே தாம் ஏமாந்ததை உணர்ந்து கொண்டவீட்டார் அந்த ஏமாற்று ஆசாமியை தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டும் ஆள் அகப்படவில்லை. (தி)

## விலை நிர்ணயம்

கழுவிய உப்பின் ஒரு கிலோ மொத்த விலையாக 10 ரூபாவாகவும், சில்லறை விலையாக ரூபா 12.50 எனவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதென்பதை தமிழீழ உப்பு உற்பத்தி நிறுவனம் கைத்தொழில் பகுதியினர் கேட்டுள்ளனர்.

## யாழ்.

அமைச்சின் செயலாளரினால் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

புதிய நிர்வாக பிரகடனத்தின்கீழ் யாழ். மாவட்ட செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர், பிரதம கணக்காளர் ஆகிய பதவிகளுக்கு பதவி அங்கீகாரம் இல்லாத காரணத்தினால் இவர்களுக்கு எத்தகைய நியமனம் வழங்கப்படும் என்பது பற்றி தகவல்கள் கிடைக்கவில்லை.

இது இவ்வாறிருக்க, சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் வடக்கு - கிழக்கு மாகாணசபையின் பொருத்தமான பதவிக்கு நியமிப்பதற்காக திருகோணமலைக்கு அழைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் 14 பிரதேச செயலகங்களில் 11 தீவகம் தவிர்ந்த பகுதிகளில் செயற்படுகின்றன (தி)

அத்துடன் இலங்கை அரசின் திட்டங்கள் பற்றி இந்திய அரசிடம் விரிவாக விளக்கப்படும் எனவும் தெரிவித்தார். மேலும் பாகிஸ்தான் நாட்டுக்கும் விஜயம் செய்யத் தான் திட்டமிட்டதாகவும், எனினும் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் தற்சமயம் நாட்டில் இல்லாததால் அது தொடர்பான திட்டங்கள் கைவிடப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

தனது விஜயத்தின் போது இந் நாடுகளின் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சபாநாயகர் ஆகியோரைச் சந்தித்து பேச இருப்பதாகவும் தெரிவித்தார்.

இலங்கை-இந்திய உறவுகளின் தற்போதைய நிலை பற்றி விபரித்த அவர்மேலும் குறிப்பிடுகையில்,பிரேமதாசா ஆட்சிக் காலத்துக்குப் பின்னர் இவ் உறவுகள் மேம்பாடு அடைந்து வந்ததாகவும் தற்போது திருமதி சிறிமாவோவின் முன்னைய ஆட்சியில் இருந்ததைப்போல் மிகவும் சிறந்த நிலையில் இருப்பதாகவும் குறிப்பிட்டார். இலங்கைப் பிரச்சினையை இலங்கையின் சொந்தப் பிரச்சினையாகவே இந்தியா கருதுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## ஒருமாத

யாழ். செயலகத்திற்கு வந்து சேர்ந்தது.

கடந்த மாதம் முதலாம் திகதி இவர் பதில் அரச அதிபராக நியமனம் செய்யப்பட்டுள்ளார் என்றும் புதிய அரச அதிபர், யாழ். மாவட்ட அரச அதிபர் பொறுப்பை ஏற்கும் வரையும் இவர் பதில் அரச அதிபராக பணி புரிவார் என்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 5ஆம் திகதி பதிவுத் தபாலில் உள்நாட்டு மாகாண சபைகள் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினால் அனுப்பி வைக்கப்பட்ட இக்கடிதம் நேற்று 2ஆம் திகதியே யாழ். செயலகத்தை வந்தடைந்தது.

(தி)

## புலிகளின்

சில யுத்தப் பிரதேசங்களில் விடுதலைப் புலிகளின் ஊடுருவல்களை தடுக்க பன்னிரண்டு படையணிகள் தேவைப்படுகின்றன. ஆனால் ஏழு படையணிகளே தற்சமயம் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டுள்ளன.

கடந்த வருடம் அரசு தாக்குதல் நடவடிக்கைகளை அதிகரிக்கும் முகமாக புதிதாக பதினாறு படையணிகளை உருவாக்கியிருந்த போதிலும் பலர் இராணுவத்தைவிட்டு வெளியேறியதால், இவ் அணிகள் முன்னணி பாதுகாப்பு நிலைகளில் காவல் கடமையில் ஈடுபடவேண்டியுள்ளது. விடுதலைப் புலிகள் இராணுவத்தின் இப்பலவீனநிலையை சரியாகப் புரிந்துகொண்டுள்ளனர் எனவும் பேச்சுவார்த்தைகள் தோல்வியடையும் பட்சத்தில் அவர்கள் இராணுவ ரீதியில் மேலான நிலையிலேயே தொடர்ந்தும் இருப்பார்கள் எனவும் இராணுவத் தளபதிகள் நம்புகின்றனர். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உணவுப்

திற்கு எழுதிய கடிதத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள பதில் கடிதத்திலேயே மேற்படி விடயம் சம்பந்தமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில், பருத்தித்துறை இறங்குதுறையில் கப்பலிலிருந்துபொருள்களை ஏற்றிக் கரைசேர்ப்பதற்கு உபயோகிக்கப்படும் இழுவைப்படகுகள் பழுதடைந்துள்ளன அவற்றின் தேவை முக்கியமானது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில தினங்களில் கொழும்பு செல்லும் புதிய அரச அதிபர் அத்தியாவசிய ஆளுநர் நாயகத்திடம் தொடர்புகொண்டு யாழ். மாவட்டத்தின் அத்தியாவசிய பொருள்களுக்கான பற்றாக்குறையை நீக்குவது சம்பந்தமான முயற்சிகளில் ஈடுபடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (தி

த. கிரிஜா (ஆசிரியை யா-உயரப்புலம் மெ.மி. த.க. வித்தியாலயம் ஆனைக்கோட்டை) பி, புவிதா (சுவிஸ்) சி. மாலதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் விஜயரட்ணம் இ. தயாபரன், வே. பிரபாகரன் ஆகியோரின் மைத்துனியும், வித்தகன், மதீபன், பிரசாத், லக்ஸ்மன் ஆகியோரின் சித்தியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (3-12-1994) 12. 00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்,

தகவல்:
**இ. தயாபரன்**
(மைத்துனர்)

மீசாலை கிழக்கு,
மீசாலை. (10273)

## கதிரமலை கந்தசாமி
### (கிராம உத்தியோகத்தர் வண். வடக்கு)

காரைநகர் சிவகாமி அம்பாள் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகக் கொண்டவரும் ஆகிய கதிரமலை கந்தசாமி அவர்கள் 29-11-94 செவ்வாய்க் கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற தி. கதிரமலை, க. சவுந்தரம் ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும், கமலாம்பிகை (மருந்தாளர், யாழ். போதனா வைத்தியசாலை) அவர்களின் அன்புக் கணவரும், கமலவதனி, திவாகரன் ஆகியோரின் தந்தையும், உதயகுமாரின் (டென்மார்க்) அன்பு மாமனும், நாகேந்திரம் (உரிமையாளர் மகாலஷ்மி ஸ்ரோர்ஸ், செங்கலடி), ஜெகதீசன் (கிராம உத்தியோகத்தர், சங்கானை கிழக்கு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், மு. அம்பலம், அ. பாக்கியம் ஆகியோரின் மருமகனும், நா. ஜெயலட்சுமி, அ. சதாசிவம், அ. மதியாபரணம், அம்பலம் மகேஸ்வரி, ஜெ. விமலாதேவி, நவரத்தினம், சதிலீலாவதி, கருணாகரன், கலாரூபவதி, விநாயகமூர்த்தி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வண்ணார்பண்ணை கோம்பையன்மணல் மயானத்திற்கு 4.12.94 ஞாயிற்றுக்கிழமை முற்பகல்11 மணிக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
**க. ஜெகதீசன்**
(சகோதரன்)

கொக்குவில்
மேற்கு (10279)